بِسۡمِ اللهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ نَحۡمَدُهٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِهِ الۡكَرِيۡمِ وَعَلٰی عَبۡدِهِ الۡمَسِيۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ

தொகுதி 7

இதழ் 26

# பதர்

வார இதழ் - காதியான்

# Weekly BADAR Qadian Tamil

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

துல்கஅதா 29 - ஹிஜ்ரி கமரி 1443 ★ இஹ்ஸான் 30 - ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ★ 30 ஜுன் 2022


## அல்லாஹ்வின் கட்டளை

وَ كَذَّبَ بِهٖ قَوۡمُكَ وَهُوَ الۡحَقُّ ؕ

قُلۡ لَّسۡتُ عَلَيۡكُمۡ بِوَكِيۡلٍ

பொருள் :

இது உண்மையாயிருந்தும், இதனை உமது சமுதாயம் மறுக்கின்றது. நீர் அவர்களிடம், நான் உங்களுக்கு பொறுப்பாளி அல்ல என்று கூறுவீராக.

(அல் அன் ஆம் : 67)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**உண்மையில் இறையச்சமுடையவரின் எந்த ஒரு துஆவும் வீணாகுவதில்லை. இறைவனின் அன்பிற்குரிய ஓர் அடியார் தனது பலவீனம், தவறு மற்றும் அறிவீனம் ஆகியவற்றின் காரணமாக தனக்கு தீங்கு பயக்கும் விஷயத்திற்காக துஆ செய்துவிட்டால் அதனை அவன் ரத்து செய்துவிடுகிறான். அதற்குப் பகரமாக அதனை விட சிறந்த விஷயத்தை வழங்கிவிடுகிறான்.**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

இறையச்சமுடைய மக்களுக்கு துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுதலின் பயன்கள் கிடைக்கின்றன. இறையச்சம் கொண்டவர் யார்? என்பதை தற்போது நான் கூறுவேன். ஆனால் தற்போது நான் மற்றொரு சந்தேகத்தை போக்குவதை அவசியமாக கருதுகிறேன். அது என்னவென்றால் சில இறையச்சமுடைய மக்கள் இருக்கின்றனர். வெளிப்படையில் அவர்களின் சில துஆக்கள் அவர்களின் விருப்பத்திற்கேற்ப நிறைவேறுவதில்லை. இது ஏன் நிகழ்கிறது? இந்த விஷயம் நினைவிற்கொள்ளத் தக்கதாகும். அதாவது, உண்மையில் இறையச்சமுடையவரின் எந்த ஒரு துஆவும் வீணாகுவதில்லை. ஆனால் மனிதன் மறைவானவற்றை அறியாதவனாக இருப்பதால் அவனது துஆவின் விளைவுகள் அவனுக்கு என்ன தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அவன் அறிவதில்லை. எனவே அல்லாஹ்வின் சிறப்பான பரிவும், கருணையும் அந்த துஆவை தனது அடியாருக்கு நன்மை பயக்கின்ற மற்றும் நல்விளைவை தரக்கூடிய வடிவில் அதனை மாற்றிவிடுகின்றன. உதாரணமாக, ஒன்றும் அறியாத ஒரு குழந்தை பாம்பை அழகான, மென்மையான பொருளாக கருதி அதைப் பிடிப்பதற்கு துணிந்தால் அல்லது நெருப்பு ஒளிமயமாக இருப்பதைக் கண்டு தனது தாயிடம் அதைக் கேட்டு அடம்பிடித்தால், அக்குழந்தையின் தாய் எவ்வளவுதான் அறிவிலியாக இருந்தாலும் கூட தனது பிள்ளை பாம்பை பிடிப்பதையோ அல்லது அதன் விருப்பத்திற்கேற்ப நெருப்பின் ஒளிமயமான ஒரு

இதன் தொடர்ச்சி 11-ஆம் பக்கம்...

**நேர்வழிக்கான பணியை நானே செய்து கொள்வேன் என்று எந்த நபர் கூறுவாரோ அவர் தவறிழைக்கின்றார். இறை கூற்றுகளின்றி வெற்றிகரமான வாழ்க்கை சாத்தியமில்லை. எந்த அளவுக்கென்றால் விலங்குகளும் கூட வஹீயின் தேவையுடையவையாக உள்ளன. அவற்றின் மீதும் ஒரு வகையான வஹீ இறங்குகின்றது. அதற்கான தெளிவான உதாரணம் தேனீக்களிடம் காணப்படுகிறது.**

ثُمَّ كُلِیۡ مِنۡ كُلِّ الثَّمَرٰتِ فَاسۡلُكِیۡ سُبُلَ رَبِّكِ ذُلُلًا ؕ يَخۡرُجُ مِنۡۢ بُطُوۡنِهَا شَرَابٌ مُّخۡتَلِفٌ اَلۡوَانُهٗ فِيۡهِ شِفَآءٌ لِّلنَّاسِ ؕ اِنَّ فِیۡ ذٰلِكَ لَاٰيَةً لِّقَوۡمٍ يَّتَفَكَّرُوۡنَ

( அந்நஹ்ல் : 70 )

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள் :

இந்த வசனத்தில் தேனீக்களைக் குறித்து விவரித்தவாறு அல்லாஹ் கூறுகின்றான். அதாவது பல்வேறு கனிகளிலிருந்தும், பூக்களிலிருந்தும் உணவை எடுத்துக் கொள்ளுங்கள். பின்னர் நாம் உங்களுக்குள் உருவாக்கியுள்ள அந்த வழிமுறைகளை பயன்படுத்தி இறைக் கட்டளைக்கேற்ப செயல்பட்டவாறு தேனை தயார் செய்யுங்கள் என்று தேனீக்களுக்கு நாம் வஹீயும் அறிவிக்கின்றோம். அடுத்து அல்லாஹ் கூறுகின்றான். அந்த தேன் வெளிப்படும்போது, அது பலதரப்பட்ட நிறங்களையும், வகைகளையும் கொண்டதாக இருக்கிறது.

மேலும் மக்களுக்கு குணமளிக்கக் கூடிய சிறப்புத் தன்மை எல்லா நிறங்களைக் கொண்ட தேன்களிலும் கலந்துள்ளது. இதில் மனிதர்களுக்கு இறங்கும் வஹீயின் பக்கமும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது, அந்த வஹீயும் பல்வேறு காலங்களில், பல்வேறு வடிவங்களில் இறங்கி வந்துள்ளது. ஒரு நபியின் போதனை மற்றொரு நபியின் போதனையிலிருந்து சில அம்சங்களில் வேறுபட்டதாக இருக்கின்றது. ஆயினும், அவ்வாறிருந்தாலும் கூட ஒவ்வொரு நபியின் வஹீயும் அது எந்த சமுதாயத்திற்காக இறங்கியிருந்ததோ, அந்த சமுதாயத்திற்கு அது குணமளிக்கும் காரணியாக அமைந்திருந்தது.

فَاسۡلُكِیۡ سُبُلَ رَبِّكِ ذُلُلًا

என்ற வசனம் இந்தக் கருத்தை சுட்டிக் காட்டுகிறது. அதாவது, ஒவ்வொரு மனிதரும்

இதன் தொடர்ச்சி 11-ஆம் பக்கம்...

## நபிமொழி

**அனுமதி கிடைக்காவிட்டால் திரும்பி சென்று விடவேண்டும்**

2062 : உபைத் இப்னு உமைர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் பின் கதாப் (ரலி) அவர்களை சந்திப்பதற்காக அனுமதி வேண்டினார்கள். அப்போது அன்னார் (ரலி) அவர்களுக்கு அனுமதி தரப்படவில்லை. (ஹஸ்ரத் உமர் (ரலி) பணிகளில்) மும்முரமாக இருந்ததாக தெரிகிறது. ஹஸ்ரத் அபூ மூஸா (ரலி) அவர்கள் திரும்பி சென்றுவிட்டார்கள். இதற்கிடையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பணிகளை முடித்துவிட்டார்கள். மேலும் எனக்கு அப்துல்லாஹ் பின் கைஸ் (ரலி) (அபூ மூஸா) அவர்களின் குரல் கேட்டதே? அவருக்கு உள்ளே வர அனுமதி கொடுங்கள் என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள். அவர் திரும்பி சென்றுவிட்டார் என்று அன்னார் (ரலி) அவர்களிடம் கூறப்பட்டது. பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னாரை அழைத்தார்கள். மேலும் (விசாரித்தபோது) ஹஸ்ரத் அபூ மூஸா (ரலி) அவர்கள் கூறினார்கள். எமக்கு இவ்வாறே கட்டளையிடப்பட்டுள்ளது. (அனுமதி கிடைக்காவிட்டால் திரும்பி சென்று விடுங்கள்) எனவே நீங்கள் இந்த விஷயத்திற்கு சாட்சியை கொண்டுவரவேண்டும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) கூறினார்கள். அன்னார் (ரலி) அன்சார் சகோதரர்களின் சபையை நோக்கி சென்றார்கள். அவர்களிடம் கேட்டபோது இந்த விவகாரத்தில் உங்களுக்கு எவரும் சாட்சியம் அளிக்கமாட்டார். ஆனால் நம் அனைவரையும் விட வயதில் குறைந்தவர் சாட்சியம் வழங்குவார் (அதாவது அபூ ஸயீது குத்ரி (ரலி) அவர்கள்). என்று அவர்கள் கூறினர்.

அப்போது அன்னார் அபூ ஸயீது குத்ரி (ரலி) அவர்களை தம்முடன் அழைத்துக் கொண்டு சென்றார்கள். (அவரது கூற்றை கேட்ட பிறகு) ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்தக் கட்டளை என்னிடமிருந்து மறைவாக இருந்துவிட்டதா? கடை வீதிகளில் கொடுக்கல், வாங்கல் என்னிடம் கவனக்குறைவை ஏற்படுத்திவிட்டது. அன்னார் (ரலி) அவர்கள் வியாபாரத்திற்காக வெளியூர் சென்று வந்தார்கள் என்பது அதன் பொருளாக இருந்தது.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4-பாடம் வியாபாரம் காதியான் பதிப்பு 2008)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## கிலாஃபத் தினத்தின் அடிப்படையில் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் முக்கியத்துவமும், அருள்களும்

### கிலாஃபத் துடன் இருந்துவரும் இறைஉதவிகளுக்கான காட்சிகளைப் பற்றிய சுருக்கமான நற்குறிப்புகள்

இறுதி காலத்தில் உங்களிடம் நபித்துவ வழியில் கிலாஃபத் நிலைபெறும் என்று கூறிய பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அமைதியாகிவிட்டது என்பது அது நீண்ட காலம் நிலை பெறக்கூடிய அமைப்பாகும் என்பதன் வெளிப்பாடாகும்.

நான் இறைவனிடமிருந்து ஒரு வல்லமையாக வெளிப்பட்டுள்ளேன். நான் இறைவனின் வல்லமையின் தோற்றம் ஆவேன். மேலும் எனக்குப் பிறகு இன்னும் சிலர் தோன்றுவர். அவர்கள் இறைவனின் இரண்டாவது வல்லமையின் தோற்றமாக இருப்பார்கள்.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 27 மே 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு ஹிஜ்ரத் மாதம் **27ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّينِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ۝
صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ۝

இன்று மே 27 ஆகும். இந்த நாள் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் கிலாஃபத் தினம் என்ற பெயரால் அறியப்படுகின்றது. நாம் ஒவ்வொரு ஆண்டும் இந்த நாளில் அல்லது இந்த நாளுக்கு முன், பின் கிலாஃபத் தினக் கூட்டத்தை நடத்துகிறோம். அது எதற்காக? இந்தக் கேள்விக்கான பதிலை நாம் எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும். நமது சந்ததிகளையும் நமது பிள்ளைகளையும் இதனை சீர்தூக்கிப் பார்க்கும்படியும், சிந்திக்கும்படியும் நாம் கூற வேண்டும். அல்லாஹ் தனது வாக்குறுதிக்கு ஏற்ப நம் மீது அருள் செய்தவாறு அஹ்மதிய்யா ஜமாஅத்தில் 1908 ஆம் ஆண்டு மே 27 ஆம் தேதி கிலாஃபத் அமைப்பை நிலை நாட்டியபோது இந்த(கிலாஃபத்) தினம் ஆரம்பமானது. அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் அன்னாரின் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான வாக்குறுதி அளித்திருந்தான். அவன் அதனை அந்த நாளில் நிறைவேற்றினான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு நீண்ட காலமாகவே தனது ஜமாஅத்தை இந்த விஷயத்திற்காக தயார்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதாவது எவரும் மரணத்திற்கு அப்பாற்பட்டவர் இல்லை. நபிமார்கள் தமது பணிகளை முழுமை செய்துவிடும் போது அல்லாஹ் அவர்களையும் கூட அழைத்துக் கொள்கிறான். தமது திரும்புதலுக்கான (மரணத்திற்கான) நேரம் அருகில் உள்ளது என்ற விஷயத்தில் அன்னார் (அலை) அவர்கள் ஜமாத்தை மீண்டும், மீண்டும் தயார்படுத்திக் கொண்டிருந்தார்கள். எனினும் அத்துடன், அன்னார் (அலை) அவர்களால் நிறுவப்பட்ட ஜமாஅத் மலர்ந்து, விரிந்து, பரவ உள்ளது என்ற நற்செய்தியையும், அல்லாஹ் அன்னாருடன் செய்த வாக்குறுதியும் நிச்சயமாக நிறைவடைந்தே தீரும் என்ற நற்செய்தியையும் அன்னார் (அலை) வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் முன்னேற்றமடைய உள்ளது. அதன் முன்னேற்றத்தை எவராலும் தடுக்க முடியாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் தமது ஒரு வழிகாட்டலில் தமது காலத்திலிருந்து பின்னவர்களின் காலம் வரை அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் அன்னாருக்குப் பிறகு நிலைபெறும் அன்னாரின் கிலாஃபத்தின் வரைபடத்தை வரைந்துள்ளார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது சஹாபிகளின் சபையில் கூறுகின்றார்கள்: அல்லாஹ் நாடும் வரை உங்களிடம் நபித்துவம் இருக்கும். அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சஹாபிகளுக்கு மத்தியில் இருப்பார்கள். பின்னர் அல்லாஹ் அதனை (நபித்துவத்தை) எடுத்துக் கொள்வான். பின்னர் நபித்துவ வழியில் கிலாஃபத் நிலைபெறும். அது முற்றிலும் நபித்துவத்தின் அடிச்சுவட்டில் நடக்கும். பின்னர் அல்லாஹ் நாடும்போது அந்த அருட்கொடையையும் எடுத்துக் கொள்வான்.

கடந்த சில காலங்களாக நான் பத்ரி சஹாபிகளின் தொடரில் நேர்வழிப் பெற்ற கலீஃபாக்களின் நற்குறிப்பையும் செய்து வருகிறேன்.

இன்றைய நாட்களில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் நற்குறிப்பு நடைபெற்று வருகின்றது. அவர்கள் அனைவரும் மிகவும் தன்னலம் அற்றவர்களாக திகழ்ந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சுன்னத்தின் படி நடந்தவாறும், திருக்குர்ஆனை தமது செயல் சட்டமாக ஆக்கிக் கொண்டு தமது கிலாஃபத் காலத்தை கழித்தார்கள் என்பது அனைத்து கலீஃபாக்களின் நற்குறிப்பிலிருந்து பட்டப்பகலைப் போன்று வெளிப்படுகின்றது. ஆக ஒவ்வொரு அடியிலும் நபித்துவத்தின் வழியில் நிலைத்திருப்பதற்கு அவர்கள் முயற்சி செய்தார்கள்.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது வழிகாட்டலில் தொடர்ந்து கூறுகின்றார்கள்: பின்னர் அவனது தக்தீருக்கு ஏற்ப துன்பம் தரும் அரசாட்சி நிலைபெறும். அதனால் மக்களின் உள்ளம் துன்பமுறும். மேலும் கஷ்டங்களை உணரும். இந்த காலகட்டம் முடிவடைந்த பிறகு அவனது இரண்டாவது தக்தீருக்கு ஏற்ப அவற்றையும் விட கொடுமையான அரசாட்சி நிலைபெறும்.

வரலாறு இதனையும் கண்டது. இன்னும் கூறப்போனால் இன்று வரை மார்க்கத்திலிருந்து விலகி நிற்கும் முஸ்லிம் ஆட்சியாளர்கள் தமது குடிமக்களிடம் அதே போன்றுதான் நடக்கின்றனர். அரசியல் அரசாங்கங்களாக இருந்தாலும் அல்லது மன்னராட்சியாக இருந்தாலும் சரியே. ஒரு கட்சியாக இருக்கட்டும் அல்லது மற்ற கட்சியாக இருக்கட்டும். எவரின் கரத்தில் ஆட்சி கிடைத்துவிட்டாலும் அவர் மீது உலகம் மேலோங்கி விடுகின்றது. எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: இவை அனைத்தும் உம்மத்துடன் நடக்கும்போது பின்னர் அல்லாஹ்வின் கருணை பொங்கி எழுந்துவிடும். மேலும் அந்த அநீதியின் காலத்தை நிறுத்திவிடும்.

பின்னர் நபித்துவ வழியில் கிலாஃபத் நிலை பெறும். இதைக் கூறிவிட்டு அன்னார் (ஸல்) அவர்கள் அமைதியாகி விட்டார்கள்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹன்பல், தொகுதி 6, பக்கம் 285)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அநீதி, அக்கரமங்களை ஒழிப்பதற்கு செய்த முன்னறிவிப்பு என்பது காத்தமுல் குலஃபா

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் பைஅத்தின் கீழ் வருகின்ற மற்றும் அன்னாரின் போதனையின் படி அமல் செய்யக் கூடிய மக்களுக்குரியதாகும். அல்லாஹ் ஏற்பாட்டை செய்துவிட்டான். மக்கள் அந்த அமைப்பின் கீழ் வராமல் தமது பிடிவாதத்தில் நிலை நின்றால் பின்னர் இன்று முஸ்லிம்கள் பார்த்து வரும் அதே விளைவுகள் தான் வெளிப்படும். வெளிப்பட்டுள்ளது. அல்லாஹ் அந்த மக்களுக்கு அறிவையும், புரிதலையும் வழங்குவானாக. மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரை அடையாளம் காண்பவர்களாக அவர்கள் இருக்கவேண்டுமே தவிர, அன்னாரை நிராகரித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஜமாஅத்தின் மீதான அநீதியிலும் வரம்பு மீறுதலிலும் முன்னேறுபவர்களாக அவர்கள் இருக்கக் கூடாது.

எவ்வாறு இருப்பினும், இந்த விஷயத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது இறுதி காலத்தில் உங்களிடம் நபித்துவ வழியில் கிலாஃபத் நிலைபெறும் என்று கூறிய பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அமைதியாகிவிட்டது என்பது அது நீண்ட காலம் நிலை பெறக்கூடிய அமைப்பாகும் என்பதன் வெளிப்பாடாகும். இந்த அமைப்பும் விரைவாக முடிந்து விடும். அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் பிறகு நிலை பெறும் அமைப்பு முடிந்து விடும் என்பது அந்த அமைதியின் பொருள் ஆகும் என்று சில மக்கள் சில விஷயங்களை புரியாததன் காரணமாக கூறுகின்றனர். இந்த மக்கள் அனைவரும் தவறிழைக்கின்றனர். அந்த அமைப்பு நிலை பெறக் கூடியதாகும் என்ற விஷயத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே தெளிவுபடுத்தி விட்டார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் அல்லாஹ் செய்த வாக்குறுதிகள் முழுமையடைய உள்ளன. வானம், பூமி அகன்றுவிடக் கூடும் ஆனால் இறை வாக்குறுதிகள் முழுமை அடைவதை எவரும் தடுக்க முடியாது. எவ்வாறு இருப்பினும் கிலாஃபத் அமைப்பு என்ற அமைப்பு நிலைபெறக் கூடிய அமைப்பாகும் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜமாஅத்தை நோக்கி கூறுகின்றார்கள்:

அன்பர்களே! ஆரம்பத்திலிருந்தே அல்லாஹ்வின் நடைமுறை இதுதான். அதாவது அவன் எதிரிகளின் இரண்டு பொய்யான மகிழ்ச்சிகளை அழித்துக் காட்டுவதற்காக இரண்டு வல்லமைகளை காட்டுகின்றான். எனவே இப்போது இறைவன் தனது பழமையான அந்த நடைமுறையை விட்டுவிடுவது சாத்திய மில்லை. எனவே நான் உங்களுக்கு எடுத்துக் கூறியிருக்கின்ற விஷயங்களில் வருத்தப்படாதீர்கள். உங்கள் உள்ளம் கவலை அடைய வேண்டும். ஏனெனில் அந்த இரண்டாவது வல்லமையைக் காண்பதும் உங்களுக்கு அவசியமாகும். ஏனெனில் அது நிரந்தரமானதாகும். அதன் தொடர் மறுமை வரை அறுந்து விடாது. மேலும் நான் செல்லாத வரை அந்த இரண்டாவது வல்லமை வர முடியாது. ஆனால் நான் சென்று விட்டால் இறைவன் உங்களுக்காக அந்த இரண்டாவது வல்லமையை அனுப்புவான். அது எப்பொழுதும் உங்களுடன் இருக்கும். இறைவனின் வாக்குறுதி பராஹீனே அஹ்மதிய்யாவில் (குறிப்பிடப்பட்டு) உள்ளது.

(அல்வஸிய்யத் ரூஹானி கஸாயின் தொகுதி 20, பக்கம்-305)

ஆக, அந்த இரண்டாம் வல்லமை அதாவது கிலாஃபத் உங்களிடம் கியாமத் வரை நிலைபெறும் என்பது இறை வாக்குறுதி ஆகும். இது அன்னாரின் சொற்களாகும். அஹ்மதிய்யா கிலாஃபத்தை பாதுகாக்கக் கூடிய அதுபோன்ற மக்கள் எப்போதும் தோன்றிக் கொண்டே இருப்பார்கள்.

எனவே நம்மில் அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் எப்போதும் இணைந்து இருப்பவர்களும், தமது சந்ததிகளுக்கும் அறிவுரை செய்து வருபவர்களும் நற்பேறு பெற்ற மக்கள் ஆவர். மேலும் அஹ்மதிய்யா கிலாஃபத்தை ஒரு காலகட்டத்திற்குள் வரையறை செய்பவர்களும் அல்லது அதுபோன்ற சிந்தனை கொண்டவர்களும் துர்பாக்கியசாலிகள் ஆவர்கள். அதுபோன்ற மக்கள் எப்போதும் தோல்வியைக் காண்பார்கள்.

ஜமாஅத்தின் வரலாறு நமக்கு இதனை கூறுகின்றது. அதாவது, ஜமாஅத்தின் எதிரிகள் முதல் கலீஃபாவின் தேர்ந்தெடுப்பின் போதும், இரண்டாவது கலீஃபாவின் தேர்ந்தெடுப்பின் போதும் தோல்வியை சந்தித்தார்கள். எவ்வாறு இருப்பினும் கிலாஃபத் நிலைத்திருப்பது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விளக்கியவாறு கூறுகின்றார்கள்:

அந்த வாக்குறுதி அதாவது கிலாஃபத் நிலைபெறுவது தொடர்பான வாக்குறுதி என்னைப் பற்றியது அல்ல. மாறாக உங்களைப் பற்றியதாகும். நான் உம்மை பின்பற்றும் உமது ஜமாஅத்தை மறுமை வரை மற்றவர்கள் மீது மேலோங்கச் செய்வேன் என இறைவன் கூறியுள்ளான்.

எனவே, என்னைப் பிரியும் நாள் உங்களுக்கு வரவேண்டியது அவசியமானதாகும். அதற்குப் பிறகு நிரந்தரமாக வாக்குறுதிக்கான அந்த நாள் வரும். நமது இறைவன் வாக்குறுதிகளில் உண்மையானவனும், நன்றியுள்ளவனும், உண்மையான இறைவனும் ஆவான். அவன் வாக்குறுதியளித்த எல்லாவற்றையும் உங்களுக்கு காட்டுவான். இந்த நாட்கள் உலகத்தின் கடைசி நாட்களாகும். பல துன்பங்கள் இறங்கும் காலமாகும். ஆனாலும் இறைவன் தெரிவித்திருக்கின்ற செய்திகள் அனைத்தும் நிறைவேறும் வரை இந்த உலகம் நிலைபெற்றிருக்கும்.

அல்லாஹ் அன்னாருடன் செய்துள்ள பெரும்பாலான வாக்குறுதிகள் நிறைவடைய வேண்டியது உள்ளது.

அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் இறைவனிடமிருந்து ஒரு வல்லமையாக வெளிப்பட்டுள்ளேன். நான் இறைவனின் வல்லமையின் தோற்றம் ஆவேன். மேலும் எனக்குப் பிறகு இன்னும் சிலர் தோன்றுவர். அவர்கள் இறைவனின் இரண்டாவது வல்லமையின் தோற்றமாக இருப்பார்கள்.

(அல்வஸிய்யத் ரூஹானி கஸாயின் தொகுதி 20, பக்கம் 305, 306)

எனவே அல்லாஹ் இஸ்லாத்தின் மறுமலர்ச்சி மற்றும் முன்னேற்றம் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்துள்ள வாக்குறுதிகள் மற்றும் முழுமையடைய இருப்பதாக அன்னாரிடம் அல்லாஹ் கூறிய விஷயங்கள் இன்ஷாஅல்லாஹ் நிச்சயமாக முழுமையடையும். அந்த வாக்குறுதிகள் நிச்சயம் முழுமையடையும். இஸ்லாத்தின் வெற்றிக்கான நாளை ஜமாஅத் காணும். இன்ஷாஅல்லாஹ். கிலாஃபத்துடன் இணைந்து இருக்கும் மக்கள் அல்லாஹ்வின் அருட்களுக்கு வாரிசுகளாகிக் கொண்டே செல்வார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத் உலகில் பரவும், ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் அவ்வாறே கூறியுள்ளார்கள்.

எனவே ஜமாஅத்தின் முன்னேற்றம் பற்றி அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இது இறைவனின் நடைமுறையாகும். அவன் மனிதனை பூமியில் படைத்த நாளிலிருந்தே எப்போதும் இந்த நடைமுறையை வெளிப்படுத்தி வந்துள்ளான்.

كَتَبَ اللّٰهُ لَاَغۡلِبَنَّ اَنَا وَرُسُلِيۡ

நிச்சயமாக நானும் எனது

தூதர்களும் வெற்றி பெற்றே தீருவோம். (58:22) என இறைவன் கூறியதற்கிணங்க தனது நபிமார்களுக்கும், தூதர்களுக்கும் உதவி செய்கின்றான். இங்கு வெற்றி என்பதன் கருத்து, நபிமார்களும், தூதர்களும் விரும்பியவாறே இறைவனின் உண்மையான அடையாளம் பூமியில் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதும், அதனை எவரும் எதிர்த்து நிற்க முடியாமலாக வேண்டும் என்பதும் ஆகும். எனவே இறைவன் வல்லமை மிக்க அடையாளங்களுடன் அவர்களது உண்மையை வெளிப்படுத்துகின்றான். மேலும் எந்த நேர்வழியை அவர்கள் உலகில் பரப்ப விரும்புகின்றார்களோ அதற்கான விதையை அவர்களது கரங்களாலேயே அவன் விதைத்து விடுகிறான். ஆயினும், அவர்களது கரங்களால் அதனை முழுமையாக நிறைவு செய்ய அவன் வைப்பதில்லை. மாறாக தனது வல்லமையின் மற்றோரு கரத்தை வெளிப்படுத்துகின்றான். அதன் மூலம் ஓரளவு முழுமை பெறாமல் இருந்த அந்த நோக்கங்களின் முழுமையான நிறைவை எட்டிவிடுவதற்கான காரணிகளை உருவாக்கிவிடுகிறான்.

(அல்வஸிய்யத் ரூஹானி கஸாயின் தொகுதி 20, பக்கம் 305, 306)

எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்த இந்த முன்னறிவிப்புகளும், அல்லாஹ்வின் வாக்குறுதிகளாக அன்னார் (அலை) அவர்கள் குறிப்பிட்ட விஷயங்களும் தனது முழுமையான நிறைவை அடைய உள்ளன. அன்னார் (அலை) அவர்களுக்குப் பிறகு நிலைபெற்றுள்ள இந்த கிலாஃபத் அமைப்பின் மூலமாகவே அவை முழுமை பெற உள்ளன. அல்லாஹ் ஜமாஅத்திற்கு (இன்னும்) முன்னேற்றம் வழங்க உள்ளான், (முன்னேற்றத்தை) வழங்கியும் வருகின்றான். அவனே மக்களை வழிநடத்துகின்றான். கிலாஃபத்துடன் அவர்களை இணைக்கின்றான். இணைத்துக் கொண்டிருக்கின்றான். ஏனென்றால் அந்த விஷயம் மனித சக்திக்குட்பட்டது அல்ல. ஜமாஅத் உறுப்பினர்கள் மற்றும் காலத்தின் கலீஃபாவிற்குமிடையில் தன்னிகரற்ற மிக வலிமையான உறவை ஏற்படுத்துவது மனித சக்திக்குட்பட்ட விஷயம் அல்ல. ஏற்கனவே அஹ்மதியாக இருப்பவர்களின் உள்ளத்தை மட்டுமே அல்லாஹ் கிலாஃபத்துடன் இணைக்கின்றான் என்பதல்ல. மாறாக எவர்கள் சுயமாக பிற்காலத்தில் இணைகிறார்களோ மேலும் முழுமையான தர்ப்பியத் கிடைத்திடாத மற்றும் முற்றிலும் புதியவர்களாக இருக்கின்றார்களோ அவர்களின் உள்ளத்தையும் கூட அல்லாஹ் கிலாஃபத்துடன் இணைத்துவிடுகின்றான். இது இறைவனின் பணி மட்டுமே ஆகும். பைஅத்திற்கு பிறகு அதே தூய்மை மற்றும் நன்றியுணர்வை மக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் காட்டுகின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் நோக்கத்தை முழுமை செய்வதற்காக அதே தூய்மை மற்றும் நன்றியுணர்வை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பெயரால் அஹ்மதிய்யா கிலாஃபத்திடம் மக்கள் வெளிப்படுத்துகின்றனர். வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹிடம் மக்கள் பைஅத் செய்தது முற்றிலும் அல்லாஹ்வின் உதவியும் ஒத்தாசையும் இல்லையென்றால் வேறென்ன? எல்லா ஜமாஅத்துகளிலும் இருக்கின்ற சில நயவஞ்சக இயல்பு கொண்ட மக்களைத் தவிர மற்ற அனைவரும் கிலாஃபத் மீதான பற்றிலும், பாசத்திலும் முன்னேறிக் கொண்டே சென்றுவிட்டனர். நயவஞ்சகர்களை அன்னார் மிகவும் கடிந்து கொண்டார்கள். மேலும் அவர்களை அவர்களுக்குரிய இடத்தில் வைத்தார்கள். அவர்களுக்கு தலைதூக்குவதற்கு தைரியம் வரவில்லை. பின்னர் இரண்டாவது கிலாஃபத் தேர்ந்தெடுப்பின் நேரத்தில் முதல் கிலாஃபத் காலத்தில் நயவஞ்சகத்துடன் ஜமாஅத்தில் இருந்துவந்த அதே எதிரிகள் கூச்சல் குழப்பம் செய்தனர். அவர்கள் எதிர்த்தனர். ஆயினும் அதன் பிறகும் கூட ஜமாஅத் ஹஸ்ரத் மியான் சாஹிப் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மது சாஹிப் என்று கூறியவாறு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்தது. அந்த எதிரிகளின் கூச்சலுக்கு மத்தியிலும், அவர்கள் குழப்பத்தை உருவாக்கியபோதிலும் எவ்வளவு வேகத்துடன் ஜமாஅத் முன்னேற்றம் அடைந்து கொண்டு சென்றது என்பதை உலகம் கண்டு கொண்டது.

உலகில் மிஷன் ஹவுஸ்கள் திறக்கப்பட்டன. பள்ளிவாசல்கள் கட்டப்பட்டன. நூல்கள் வெளியிடப்பட்டன. ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் எந்த பணிகளை செய்வதற்கு தோன்றி இருந்தார்களோ அவை அதிகரித்துக் கொண்டே சென்றன.

பின்னர் மூன்றாவது கிலாஃபத் காலத்தில் அப்போதைய அரசாங்கத்தின் மிக கடுமையான தாக்குதல்களுக்கு மத்தியிலும் அல்லாஹ் ஜமாஅத்திற்கு முன்னேற்றங்களை அருளினான். ஜமாஅத்தின் கைகளில் பிச்சைப் பாத்திரம் ஏந்தச் செய்வேன் என்று வாதிட்டவர்கள் மிக மோசமான நிலையில் உலகத்தை விட்டு விடைபெற்றனர்.

அடுத்து, நான்காவது கிலாஃபத் காலக் கட்டத்தில் முன்னேற்றத்திற்கான மேலும் ஒரு அத்தியாயம் திறந்தது. அல்லாஹ்வின் உதவிகள் மற்றும் ஆதரவுகளுக்கான புதிய காட்சிகளை நாம் கண்டோம். இஸ்லாத்தை பரப்புவதற்கான புதிய வழிகள் திறந்தன. காலத்தின் கலீஃபாவின் கைகளை வெட்ட வேண்டும் என சிந்திக்க கூடியவர்கள் தமது கைகளாலேயே வெட்டுண்டு போயினர். வானத்தில் அவர்களின் உடல் சிதறிவிட்டது. ஆனால் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான முன்னெடுப்பை தடுக்க முடியவில்லை. தப்லீக் மைதானம் பரந்து விரிவடைந்தது. MTA தொடங்கப்பட்டது. அதன் மூலம் எல்லா வீடுகளிலும் ஜமாஅத்தின் தூதுச் செய்தி சென்றடைய ஆரம்பமானது. இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் அல்லாஹ் செய்த வாக்குறுதியின் முழுமை செய்தலை நோக்கிய முன்னெடுப்பாகும். ஒருவர் புரிந்து கொண்டால் இதுவே அந்த விஷயமாகும். இவை அல்லாஹ்வின் வாக்குறுதிகள் முழுமையடைதல் ஆகும். இல்லையென்றால் அது வேறு என்னவாக இருந்தது?

அடுத்து, ஐந்தாவது கிலாஃபத் காலக் கட்டத்திலும் அல்லாஹ் தனது உதவிகள் மற்றும் ஆதரவுகளுக்கான காட்சிகளை காட்டினான். மேலும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்டவைப்பதற்காகவும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவும் புதிய வழிகளை திறப்பதற்கான ஏற்பாடு MTA-விலேயே நடந்தது. ஒன்றுக்குப் பகரமாக MTA-வின் 8 சேனல்கள் பல்வேறு மொழிகளில் துவங்கப்பட்டன. உலகின் பல்வேறு மொழிகளில் பல்வேறு நிகழ்ச்சிகளின் மொழியாக்கங்கள் ஆரம்பமாகின. உலகின் எல்லா மூலைகள் வரையிலும் அதாவது அதற்கு முன் எங்கெல்லாம் MTA சென்று சேராமல் இருந்ததோ அங்கெல்லாம் MTA சென்று சேர்ந்தது. மேலும் அங்குள்ள உள்ளூர் மொழிகளில் அந்த மக்களுக்கும், அந்த நாடுகளுக்கும், அந்தப் பகுதியில் வசிப்பவர்களுக்கும் அஹ்மதிய்யத் மற்றும் உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தி சென்றடைய தொடங்கியது. அதன் மூலம் லட்சக்கணக்கான நல்ல ஆன்மாக்களுக்கு அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்ளும் நற்பேறு கிடைத்தது.

அடுத்து MTA மற்றும் ரேடியோ

போன்றவற்றின் மூலமாக மட்டுமல்லாமல் அல்லாஹ் சுயமே மக்களுக்கு வழிகாட்டினான். மேலும் மக்களுக்கு கனவுகளின் மூலமாகவும் பல்வேறு நூல்கள் வாயிலாகவும் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை ஒப்புக் கொள்வதற்கு நற்பேறு வழங்கினான். நாம் அஹ்மதிய்யத்தின் வரலாற்றைப் பார்க்கும்போது நமக்கு தெரிய வருகிறது. அதாவது ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் அன்னாரை ஒப்புக் கொள்வதன் பக்கம் அல்லாஹ் சுயமே மக்களுக்கு வழிகாட்டினான். அடுத்து, ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலத்திலும் அதே தொடர் நிலை பெற்றிருந்தது. அல்லாஹ் சுயமே வழிகாட்டிக் கொண்டிருந்தான். மேலும் நற்பேறு பெற்ற ஆன்மாக்கள் ஜமாஅத்தில் இணைந்து வந்தன. அடுத்து, இரண்டாவது கிலாஃபத் காலக் கட்டத்திலும் அதுபோன்ற ஏராளமான சம்பவங்கள் உள்ளன. அல்லாஹ் அவர்களின் பெரியவர்களுக்கு எவ்வாறு அஹ்மதிய்யத்தை ஒப்புக்கொள்ளும் நற்வேறை வழங்கினான் என்பதை எடுத்துரைக்கும் மரபு பழைய குடும்பங்ளிலும், அவர்களது வீடுகளிலும் இருந்து வருகிறது.

அடுத்து, மூன்றாவது கிலாபத்திலும் இந்த தொடர் தென்படுகின்றது. பின்னர் நான்காவது கிலாஃபத்திலும் நல்ல உள்ளங்களுக்கு அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்வதன் பக்கம் அல்லாஹ்வின் புறமிருந்து வழிகாட்டல் கிடைத்தது. இவை அனைத்தும் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்த வாக்குறுதிகளின் விளைவாக இருந்தது. இவ்வாறு ஒவ்வொரு கிலாஃபத் காலகட்டத்திலும் ஜமாஅத் முன்னேற்றம் அடைந்து கொண்டே இருந்தது. ஐந்தாவது கிலாஃபத்துடனும் அல்லாஹ்வின் நடைமுறைகள் அவ்வாறே உள்ளன.

தப்லீக்கிற்கான வழிகளையும் அல்லாஹ் திறந்து கொண்டே செல்கின்றான். உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தியான அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை கேட்பதன் பக்கமும், ஒப்புக் கொள்வதன் பக்கமும் அல்லாஹ் மக்களின் உள்ளங்களை ஈர்த்துக் கொண்டே செல்கிறான். முற்றிலும் இறை உதவிகளை அறிவித்துக் கொடுக்கும் அதுபோன்ற சம்பவங்கள் உள்ளன. அவ்வாறில்லையென்றால் மனித முயற்சிகளால் மட்டும் மக்கள் ஒருபோதும் ஒப்புக் கொண்டிருக்கமாட்டார்கள். எவ்வாறு அல்லாஹ் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் பக்கம் மக்களின் உள்ளங்கள் திரும்புவதற்கு காரணிகளை உருவாக்கினான்? மேலும் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் உண்மையும் அவர்களுக்கு எப்படி தெளிவானது? மேலும் எவ்வாறு மக்களின் உள்ளங்களில் கிலாஃபத்தின் மீது அன்பு உருவானது? போன்றவை தொடர்பான சில சம்பவங்களை நான் எடுத்துரைக்கிறேன்.

கினிபஸாவ் ஆஃப்ரிக்காவின் ஒரு தொலை தூர நாடாகும். அங்கு அப்துல்லாஹ் சாஹிப் முன்னர் கிறித்துவ நண்பராக இருந்தார். அவர் கூறுகின்றார்: சில காலத்திற்கு முன்னர் அவர் கனவு ஒன்று கண்டார். ஒரு நபர் இருக்கின்றார். அவருக்கு வெண் நிற தாடி உள்ளது. மேலும் அவர் தலைப்பாகை அணிந்துள்ளார். மேலும் மக்களிடம் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கிறார். முழு அமைதியுடன் மக்கள் அவரது சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அவர் கூறுகிறார்: அந்த நபரின் சொற்பொழிவாற்றுகின்ற முறை முற்றிலும் எளிமையாகவும், எங்களுடைய மக்களின் சொற்பொழிவு முறையிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகவும் இருந்தது.

அவர் கண் விழித்தபோது அவருக்கு எதுவும் புரியவில்லை. பின்னர் அவர் அதை மறந்துவிட்டார். சில நாட்களுக்குப் பிறகு மீண்டும் அந்தக் கனவோடு ஒத்த கனவு அதேபோன்று வந்தது. அதன் மூலம் அவரது நினைவில் அந்த நபரின் முகம் பதிந்துவிட்டது. பின்னர் மூன்றாவது முறையாக அவருக்கு கனவு வந்தது. அந்த நபர் யார்? என்று அறிந்து கொள்ளவேண்டும் என அவர் முயற்சி செய்தார். ஆனால் அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒரு நாள் தற்செயலாக கிராமத்திற்கு அருகில் உள்ள ஃபரீன் எனும் இடத்தில் அமைந்துள்ள நமது பள்ளிவாசலுக்கு சென்றார். அந்த நாள் ஜுமுஆ நாளாக இருந்தது. ஜமாஅத் சகோதரர்கள் MTAவில் எனது குத்பாவைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

அவர் கூறுகின்றார்: என்னைப் பார்த்துவிட்டு, குத்பா கொடுத்துக் கொண்டிருக்கும் இவர் யார்? என்று முஅல்லிம் சாஹிபிடம் உடனடியாக கேட்டார். அன்னார் எங்களது கலீஃபா ஆவார்கள் என்று முஅல்லிம் சாஹிப் கூறினார். எவ்வாறிருப்பினும் அவர் அமைதியாக அமர்ந்து குத்பா கேட்டுக் கொண்டிருந்தார். குத்பாவிற்குப் பிறகு ஜுமுஆ தொழுகையை தொழுதார். தொழுகை முடிந்தவுடன் உடனடியாக எழுந்து நின்றார். பின்னர் அனைத்து ஜமாஅத் சகோதரர்களின் முன்னிலையிலும் நான் இன்று இஸ்லாத்தை ஒப்புக் கொள்கிறேன் என்று கூறத் தொடங்கினார். மேலும் எனக்கு இறைவன் மூன்று முறை கனவில் இந்த மனிதரை காட்டினான். அவரால் எனது ஆன்மா பெரும் தாக்கமடைந்திருந்தது. நான் ஒரு நீண்ட காலமாக அவரை தேடிக் கொண்டிருந்தேன். ஆனால் இன்று தற்செயலாக நான் உங்கள் பள்ளிவாசலுக்கு வந்தேன். அப்போது உங்கள் கலீஃபாவை நான் கண்டேன். நான் கனவில் பார்த்திருந்த அதே முகம் தான் இது. நான் கனவில் பார்த்திருந்த அதே காட்சியாக இது இருந்தது. அதாவது மக்கள் அமைதியாக அமர்ந்து சொற்பொழிவை கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மேலும் நான் இஸ்லாம் அஹ்மதிய்யத்தில் இணைகின்றேன்.

ஒரு தொலை தூர பகுதியில் அல்லாஹ் இவ்வாறு வழிகாட்டினான். அதாவது முதலில் கனவில் பார்க்கின்றார். பின்னர் அல்லாஹ் எப்படிபட்ட ஏற்பாட்டையும் செய்துவிடுகின்றான் என்றால் (கனவில் காட்டப்பட்ட) அதே காட்சி தென்பட்டுவிடுகின்றது.

எங்களுடன் அவ்வாறு ஏன் நடப்பதில்லை என சிலர் கேட்கின்றனர்? ஏனென்றால் அது அல்லாஹ்வின் அருளாகும். அவன் யாருக்கு விரும்புகிறானோ அவருக்கு வழிகாட்டுகின்றான். ஆயினும் நல்இயல்பு உடையவராக இருப்பதும் அவசியமாகும். அல்லாஹ்வின் பக்கம் குனிவதும் அவசியமாகும். நிச்சயமாக அல்லாஹ் எந்த மனிதருக்கு இவ்வாறு வழிகாட்டுவானோ அந்த நபரிடம் ஏதாவது நன்மை இருக்கும்.

பின்னர் கேம்பியாவின் அமீர் சாஹிப் எழுதியுள்ளார்கள். அதாவது அங்கு சிஸ்டர் ஃபாடூ சாஹிபா என்ற ஒரு பெண்மணி இருக்கின்றார். அவருக்கு வயது சுமார் 60 இருக்கும். அவர் கூறுகின்றார்:

எங்களது பகுதியில் இஸ்லாமிய பிரிவைச் சேர்ந்த நபர்கள் வந்தனர். அஹ்மதிகள் காஃபிர்கள் ஆவர் என்றும், அவர்கள் சொர்க்கத்தில் ஒருபோதும் நுழைய மாட்டார்கள், அவர்களிடம் எவ்வகையான கொடுக்கல் வாங்கலும் வைக்கக் கூடாது என்றும் கூறினர். கிராமத்தின் பெரும்பாலார் அவர்களின் கூற்றை ஏற்றுக் கொண்டனர். ஆனால் அந்தப் பெண்மணி கூறுகின்றார்.

நான் மிகவும் கவலையடைந்தேன்.

அவர் அல்லாஹ்விடம் வழிகாட்டலுக்காக துஆ செய்யத் தொடங்கிவிட்டார். சில நாட்களுக்குப் பிறகு அவருக்கு இவ்வாறு கனவு வந்தது. அதாவது, அந்த கிராமத்திற்கு வந்திருந்த நபர்களின் கண்கள் நட்சத்திரத்தைப் போன்று ஒளிவீசிக் கொண்டிருக்கின்றன. அவர்கள் கைகளில் திருக்குர்ஆனை ஏந்தி

இருக்கின்றார்கள். ஆனால் திருக்குர்ஆனின் வாசகங்களை படிக்க முடியவில்லை என்று புகார் செய்கின்றார்கள். அப்போது அல்லாஹ் அவர்களை குருடர்களாக்கிவிட்டான். இவ்வாறு இனி அவர்களால் சம்பாதிக்க முடியாது. மேலும் அவர்கள் இழிவடைந்து விட்டார்கள் என்று அவர் கூச்சலிடத் தொடங்கிவிட்டார்.

அந்தப் பெண்மணி கூறுகின்றார்;

நான் கனவில் இவ்வாறும் கண்டேன். அந்த கூட்டத்தினர் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபா அவர்களுக்கு கை கொடுக்க விரும்புகின்றனர். ஆனால் அதில் அவர்களால் வெற்றி பெற முடியவில்லை. மேலும் அஹ்மதிய்யத் நிச்சயமாக உண்மையாகும். ஆனால் நாங்கள் ஏற்றுக் கொண்டுவிட்டால் எங்களது சீடர்கள் எங்களிடமிருந்து விலகிவிடுவார்கள் என்று அவர்களே அதனை ஒப்புக் கொள்கின்றனர். எவ்வாறு இருப்பினும் அந்தப் பெண்மணி காலையில் அந்தக் கனவை தனது குடும்பத்தினரிடம் கூறினார்.

ஆஃப்ரிக்கர்களிடம் சிந்தனையும், புரிதலும் குறைவாக இருக்கும் என்று மக்கள் கூறுகின்றனர். ஆனால் அவர் அந்த கனவிற்கு இவ்வாறு தனது விளக்கத்தையும் கொடுத்துள்ளார். அதாவது, அவர்களுக்கு ஒளிமயமான கண்கள் இருந்தன. ஆயினும் அதன் பிறகும் அவர்களால் திருக்குர்ஆனின் எழுத்துக்களை அடையாளம் காண முடியவில்லை. அதன் பொருள் அவர்கள் உண்மையிலிருந்து முற்றிலும் வழிதவறிவிட்டார்கள் என்பதாகவே உள்ளது.

எனவே அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட சில மக்களின் இதுபோன்ற சம்பவங்கள் உள்ளன. அதிலிருந்து அல்லாஹ்வின் சிறப்பான உதவிகள் அவர்களுக்கு இந்தக் காட்சியை காட்டுகின்றன என்பதை வெளிப்படுத்துகிறது.

கோயிட்ட மாலா தென்அமெரிக்க நாடுகளில் ஒரு நாடாகும். அங்குள்ள நமது பள்ளிவாசலிருந்து 250 கிலோ மீட்டர் தொலைவில் மெக்ஸிகோவின் எல்லையில் சான் மார்கோஸ் என்ற ஓர் இடம் உள்ளது. அந்தப் பகுதியைச் சார்ந்த வெரேனிகா என்ற பெண்மணி கூறுகின்றார்:

நான் பத்து வருடங்களுக்கு முன் ஒரு கனவு பார்த்தேன்.

ஒரு நபர் அந்தக் கனவில் வந்தார். மேலும் உண்மையான வழி இஸ்லாம் ஆகும் என்று அவர் கூறினார். திருக்குர்ஆனை ஓதும்படி கூறினார். அதற்கு எனக்கு ஓதத் தெரியாது என்று நான் கூறினேன். ஆனால், உம்மால் ஓத முடியும் என்று அவர் கூறினார்.

காலையில் எழுந்து அவர் தமது கணவரிடமும், தந்தையிடமும் அந்தக் கனவைக் கூறினார். அதற்கு அவர்கள், இஸ்லாம் ஒன்றும் உண்மைக்கான வழியல்ல. அது தீவிர வாத மார்க்கமாகும் என்று கூறினர். இவர்கள் அனைவரும் கிறித்தவ மக்கள் ஆவர்.

ஆனால் அந்தப் பெண்மணி கூறுகின்றார்.

எனது மனம் நிம்மதியடையவில்லை. நான் இன்டர்நெட்டில் இஸ்லாத்தைப் பற்றி ஆராய தொடங்கிவிட்டேன். இன்டர்நெட்டில் சுயமே இஸ்லாத்தைப் பற்றி கற்றுக் கொண்டிருந்தேன். ஒருநாள் கடைவீதியில் அன்னார் சென்று கொண்டிருந்தபோது பர்தா அணிந்திருந்த பெண் ஒருவரை அவர் கண்டார். அவரை பார்த்தபோது அவரை சந்திக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு தோன்றியது.

பின்னர் உங்களுடைய இந்த ஆடை எப்படிபட்டது? என அவரிடம் கேட்டார். அதற்கு அவர், நான் முஸ்லிம் ஆவேன். எனவே நான் பர்தா அணிந்துள்ளேன் என அவர் கூறினார். அதன் பிறகு அந்த முஸ்லிம் பெண்மணியுடன் அவருக்கு தொடர்பு ஏற்பட்டது. அந்தப் பெண்மணி அவருக்கு இஸ்லாத்தைப் பற்றிய விளக்கத்தை கூறினார். அந்தப் பெண்மணி அஹ்மதியாக இருந்தார்.

தொடர்ந்து அவர் கூறுகின்றார்:

நான் அவரது இந்த விஷயங்களைக் கேட்டு, இஸ்லாத்தின் போதனைகளை கேட்டப் பிறகு பைஅத் செய்துவிட்டேன். ஆனால் குடும்பத்தினர் திருப்தி கொள்ளவில்லை. அவர்கள் சில ஆட்சேபனைகளை செய்து கொண்டிருந்தனர். அதற்கான பதிலை என்னால் கொடுக்க முடியவில்லை. எனவே நான் அந்த(அஹ்மதி)ப் பெண்ணிடம், நீங்கள் எங்கள் வீட்டிற்கு வாருங்கள். நான் உறவினர்களை ஒன்று கூட்டுகிறேன். நீங்கள் அவர்களின் ஆட்சேபனைகளுக்கு பதில் கொடுங்கள் என்று கூறினேன். எனவே ஏராளமான முறை தப்லீக் அமர்வுகள் நடந்தன. அவர்களுக்கு தப்லீக் செய்யத் தொடங்கிவிட்டார். ஆக அந்தப் பெண்மணி பைஅத் மட்டும் செய்யவில்லை. மாறாக மற்றவர்களுக்கும் தூதுச் செய்தியை எட்ட வைக்க தொடங்கிவிட்டார். நண்பர்களை ஒன்று கூட்டினார். பின்னர் அவர்களுக்கு சிறு விருந்திற்கான ஏற்பாட்டையும் செய்தார். வக்கீலுக்கு படித்துக் கொண்டிருக்கும் மகன் ஒருவரும் அவருக்கு உள்ளார். அவர் பல்கலை கழகத்தில் இறுதி ஆண்டில் படித்து வருகிறார். அவரும் பைஅத் செய்துவிட்டார்.

அந்தப் பெண்மணிக்கு எவ்வளவு உத்வேகமும், ஆர்வமும் உள்ளது என்றால் அவர் இன்டர்நெட் மூலம் சுயமாக திருக்குர்ஆன் ஓதக் கற்றுவிட்டார். ஏராளமான சூராக்களையும் மனனம் செய்துவிட்டார். பின்னர் ஆடியோவை கேட்டு அவரால் அரபி மொழியில் எழுத முடியவில்லை. எனினும் தனது (தாய்)மொழியில், ரோமன் மொழியில் முழு திருக்குர்ஆனையும் எழுதிவிட்டார்.

அமீர் சாஹிப் கூறுகின்றார்கள்:

நான் சுற்றுப் பயணத்தில் சென்றிருந்தபோது அவர்களின் நோட்புக்கை பார்த்தேன். முழு திருக்குர்ஆனையும் அன்னார் தமது கரங்களால் எழுதியிருக்கிறார். தற்போது அவர் அரபி கற்றுக் கொண்டிருக்கிறார். அதனை அவர் அரபியில் எழுதிக் கொண்டிருக்கிறார்.

அல்லாஹ் இவ்வாறு நல்ல உள்ளங்களை ஜமாஅத்தில் கொண்டு வருகிறான். இன்னும் கூறப்போனால் அன்னாருக்குப் பிறகு அன்னார் (அலை) அவர்களிடம் செய்யப்பட்ட வாக்குறுதிகளையும் அல்லாஹ் முழுமை செய்து கொண்டிருக்கின்றான்.

இந்தோனேசியா, மற்றொரு தொலை தூர பகுதியாகும். அங்கு ஒரு இளைஞருக்கு தப்லீக் செய்யப்பட்டபோது அவர் உடனடியாக பைஅத் செய்துவிட்டார்.

அந்த ஜமாஅத்தின் தலைவர் நூர் சாஹிப் கூறுகின்றார்கள்:

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

நான் திரும்பி செல்லும்போது அவருக்கு சில புத்தகங்களை கொடுத்தேன். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புகைப்படங்களைக் கொண்ட புரோவுசரும் கொடுத்தேன். அந்த இளைஞர் வீட்டிற்கு சென்றபோது அவரது தந்தை ஒரு புரோவுசரை பார்த்துவிட்டு, இந்தப் புகைப்படம் யாருடையது? என்று கேட்டார்.

அதற்கு, இது இமாம் மஹ்தியின் புகைப்படம் ஆகும் என்று அந்த இளைஞர் பதில் அளித்தார்.

நான் நேற்று இரவு ஒரு கனவு பார்த்திருந்தேன். அதாவது இமாம் மஹ்தி வருகை தந்துள்ளார்கள். எனவே ஏற்கனவே அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகம் இருந்தது. எனவே நான் உடனடியாக பைஅத் செய்துவிட்டேன் என்றும் அந்த இளைஞர் கூறினார். அதற்கு, அப்படியென்றால் நானும் பைஅத் செய்ய விரும்புகிறேன் என்று அவரது தந்தை கூறிவிட்டார்.

இவ்வாறு அல்லாஹ் (மக்களை) ஜமாஅத்தில் இணைத்து வருகிறான்.

பார்கினாஃபாஸ் நாட்டின் முஅல்லிம் சாஹிப் ஸய்லா கரீம் சாஹிப் கூறுகின்றார்கள்:

எங்களது பகுதியைச் சார்ந்தவர் ஹமீது சாஹிப் ஆவார். தொடர்ந்து ரேடியோ கேட்டு வருவார். ஜமாஅத்தின் மீது அனுதாபமும் கொண்டிருந்தார். சில நேரங்களில் சந்தாவும் கூட வந்து கொடுப்பார். இன்னும் கூறப்போனால் சில சமயங்களில் தொடர்ந்து சந்தா கொடுக்க தொடங்கிவிடுவார். ஆனால் பைஅத் செய்யுமாறு கூறப்பட்டால் ஏதாவது ஒருவகையில் தாமதப்படுத்தி வந்தார்.

சந்தா ஆம் கொடுத்திருக்க மாட்டார். தஹ்ரீகே ஜதீது, வக்ஃபே ஜதீது கொடுத்திருப்பார். அல்லது ஸதகா போன்ற வேறு ஏதாவது கணக்கில் கொடுத்திருப்பார். எவ்வாறிருப்பினும் சந்தா செலுத்தி வந்தார். பொருள் தியாகம் செய்து வந்தார். நான் கானாவில் இருந்தபோது அங்கும் பார்த்துள்ளேன். , எங்களது மௌலவிகளிடம் கொடுத்தால் அவர்கள் தின்றுவிடுவார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத் அதனை சரியாக பயன்படுத்தும் என்று கூறியவாறு விவசாயிகளாக இருந்த ஏராளமான மக்கள் நம்மிடம் வந்து ஸகாத் கொடுத்து செல்வார்கள்.

ஒரு நாள் அவர் கனவில் பார்த்தார். அதாவது இஜ்திமா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதில் மக்கள் நான்கு சுவர்களுக்குள் இருக்கின்றனர். மேலும் சில மக்கள் நான்கு சுவர்களுக்கு வெளியே இருக்கின்றனர்.

அவர் கூறுகின்றார்: நான்கு சுவர்களுக்குள் இருப்பவர்கள் அனைவரும் அஹ்மதிகள் ஆவர். அப்போது, நானும் அவர்களை சார்ந்தவன் தான். என்னையும் உள்ளே செல்லவிடுங்கள் என்று நான் கூறுகிறேன்.

அப்போது, இந்த நான்கு சுவற்றுக்குள் பைஅத் செய்தவர்கள் மட்டுமே நுழைய முடியும். நீங்கள் பைஅத் செய்யாததால், நீங்கள் உள்ளே செல்ல முடியாது என்று குரல் வருகிறது. எனவே அந்த கனவு பார்த்த அடுத்த நாளே அவர் பைஅத் செய்துவிட்டார். மனித முயற்சிகளால் அவரை ஜமாஅத்தில் இணைக்க முடியவில்லை. ஆனால் நல்ல இயல்பு கொண்டவராக இருந்தார். அல்லாஹ் அவரை வீணாக்க விரும்பவில்லை. எனவே இவ்வாறு அவருக்கு வழிகாட்டினான்.

எங்களுக்கு கனவுகள் வருவதில்லை என்று கூறுகின்ற அந்த மக்களின் ஆட்சேபனைகளுக்கான பதில் இதுவாகும்.

முதலில் நல் இயல்பு படைத்தவராக ஆகுங்கள். மனதை தூயதாக வையுங்கள். துஆ செய்யுங்கள். அதன்பின்பே அல்லாஹ் வழிகாட்டவும் செய்வான்.

மாலி நாட்டின் ஒரு நண்பர் முஹம்மது கோனே சாஹிப் ஆவார். அவர் ஜமாஅத் ரேடியோவைக் கேட்டார். மேலும் ஜமாஅத்திற்கு எதிராக பேசுகின்ற மக்களின் கூற்றுகளையும் அவர் கேட்டார். அதன் பிறகு, அல்லாஹ்வே எனக்கு நேரான வழியைக் காட்டு என்று அவர் துஆ செய்யத் தொடங்கிவிட்டார்.

அதன் பிறகு அவர் கூறுகின்றார்:

நான் கனவில் ஒரு நாள் ஒரு நபரை பார்த்தேன். அவர் ஒரு சான்றோராக இருந்தார். மேலும் எல்லா அடியார்களும் அஹ்மதிய்யத்திற்கு வருவார்கள். இப்போது வந்தாலும் சரியே அல்லது பின்னர் வந்தாலும் சரியே என்று அவர் கூறிக் கொண்டிருந்தார்.

எனவே இது தற்போது அல்லாஹ்வின் தக்தீர்(இறை நியதி) ஆகும். இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதைப் போன்று அன்னார் (அலை) அவர்களிடம் அல்லாஹ் செய்த வாக்குறுதியாகும்.

நிலைபெற்றுள்ள அஹ்மதிய்யா கிலாஃபத் எனும் அருட்கொடையின் மூலமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கம் முழுமை பெறும். எவ்வாறிருப்பினும் அந்த நபர் அந்த விஷயத்தின் அடிப்படையில் பைஅத் செய்துவிட்டார்.

பின்னர் பனி கஸாவ் முபெல்லிக் எழுதியுள்ளார்:

உஸ்மான் சாஹிப் என்பவர் எங்களது புதிய அஹ்மதி ஆவார். அன்னாருடைய உறவினர்கள் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்கின்றார்கள் என்று அன்னாருக்கு தெரிய வந்தது. அப்போது அவர் ஜமாஅத்தை எதிர்ப்பதற்காக சில மவ்லவிகளை ஒன்று திரட்டிக் கொண்டு அந்தப் பகுதிக்கு சென்றார். அப்போது நமது முஅல்லிம் சாஹிப், அவரிடம் நீங்கள் நிச்சயம் எதிர்ப்பு தெரிவியுங்கள். உங்களை தடுக்க முடியாது. ஆனால் ஒரு முறை எங்கள் தூதுச் செய்தியை கேளுங்கள். விஷயத்தை கேளுங்கள். பின்னர் ஆதாரங்களுடன் எதிர்ப்பை தெரிவியுங்கள் என்று கூறினார்கள். மவ்லவி சாஹிபுகள் தூதுச் செய்தியை கேட்பதற்கு வருவதற்கு மறுத்துவிட்டார்கள். ஆனால் உஸ்மான் சாஹிப் அழைப்பை ஏற்றுக் கொண்டுவிட்டார்கள். அவருக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையைப் பற்றி கூறப்பட்டது. மேலும் ஜமாஅத்தின் தூதுச் செய்தியை கேட்பதற்கு வந்தார்கள். அன்னார் வந்த நாள் ஜுமுஆ நாளாக இருந்தது. அங்கு அந்த நாளில் MTA-வில் எனது ஜுமுஆ குத்பா வந்து கொண்டிருந்தது.

அப்போது, உங்களுக்கு நேரம் இருந்தால் சிறிது நேரம் குத்பாவைக் கேளுங்கள் என்று நாங்கள் அவரிடம் கூறினோம். அதற்கு, சிறிது நேரம் உள்ளது. நான் சிறிது நேரம் கேட்கிறேன் என்று அவர் கூறினார். ஆனால் அவர் குத்பா கேட்கத் தொடங்கியபோது எவ்வளவு நேரம் ஆனது என்பதையே மறந்துவிட்டார். முழுமையாக குத்பாவைக் கேட்டார். அதன் பிறகு, அஹ்மதிய்யா ஜமாஅத் காஃபிராக இருக்க முடியாது. நான் கேள்விப்பட்டதைப் போன்று உங்கள் கலீஃபா ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் சஹாபிகளின் வாழ்க்கை வரலாற்றை எடுத்து வைத்து வருகின்றார்கள். எந்த ஒரு காஃபிர் ஜமாஅத்தும் இந்த பணியை செய்ய முடியாது என்று கூறினார். அதன் பிறகு ஜமாஅத்தை எதிர்ப்பதை அவர் நிறுத்திவிட்டார். மேலும் சிறிது காலத்திற்குப் பிறகு குடும்பத்துடன் ஜமாஅத்திலும் இணைந்துவிட்டார். அவர் ஜமாஅத்தில் இணைய மட்டும் செய்யவில்லை. மாறாக தற்போது தப்லீக்கும் செய்து வருகிறார். தனது சந்தாக்களையும் தொடர்ந்து முறையாக செலுத்தி வருகிறார். தற்போது இது குத்பாக்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் தாக்கமாகும். அல்லாஹ் காலத்தின் கலீஃபாவின் குத்பாக்களின் மூலம் இந்த தாக்கத்தை ஏற்படுத்துகிறான்.

கோன்கோ கன்ஷாகே நாட்டின் உள்ளூர் மிஷனரி சாஹிப் கூறுகின்றார்கள்:

அங்கு உள்ளூரில் ஒரு பகுதியில் தப்லீக் திட்டத்தை துவங்கினார்கள். அப்போது ஜமாஅத் அல்லாதவர்கள் ஒன்று சேர்ந்து எதிர்க்க தொடங்கிவிட்டார்கள். மூன்று மாதத்திற்குப் பிறகு அதே எதிரிகளிலிருந்து ஒரு நண்பர் உஸ்மான் சாஹிப் என்பவர் மிஷன் ஹவுஸில் தொடர்பு கொண்டு நான் குடும்பத்துடன் ஜமாஅத்தில் இணைய விரும்புகிறேன் என்று கூறினார். அதற்கான காரணம் அவரிடம் கேட்கப்பட்டபோது அவர் கூறினார். ஒரு நாள் எனது மனைவி சேட்டிலைட் சேனல் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது உங்கள் சேனல் MTA வந்துவிட்டது. நான் அஹ்மதிய்யத்தை எதிர்ப்பதில் முன்னணியில் இருக்கிறேன் என்பதை அவர் அறிந்திருந்தார். எனவே என்னையும் அவர் அழைத்தார். மேலும் நான் ஜமாஅத்தைக் குறித்து தவறாக பேசத் தொடங்கியபோது, முதலில் நிகழ்ச்சியை முழுமையாக கேளுங்கள். பின்னர் பேசுங்கள் என்று கூறினார்.

அப்போதும் MTA-வில் எனது குத்பா ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.

அவர் கூறுகின்றார்: குத்பா கேட்ட பிறகு, இன்று எனது காதில் விழுகின்ற குரல்தான் இஸ்லாத்தின் உண்மையான சித்திரமாகும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுவிட்டது. கலீஃபாவின் கூற்றை கேட்டப் பிறகு ஜமாஅத்தின் உண்மையின் மீது எனக்கு எந்த சந்தேகமும் எஞ்சியிருக்கவில்லை.

தற்போது இது எனது சொந்த சிறப்பு எதுவும் இல்லை. மாறாக கிலாஃபத் மூலமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தை முழுமைபடுத்த அல்லாஹ் வழங்கிய வாக்குறுதியாகும். மேலும் இது அல்லாஹ்வின் அருளாகும். அவற்றின் வெளிப்பாடாகும்.

கினிபஸாவ் நாட்டின் முபெல்லிக் இன்சார்ஜ் சாஹிப் கூறுகின்றார்கள்:

ஒரு கிராமத்தில் தப்லீக் செய்தேன். பெரும்பாலான நபர்கள் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டுவிட்டனர். நான்கு குடும்பத்தினர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டனர். நமது குழுவினர் அங்கு MTA இன்ஸ்டால் செய்ய சென்றபோது, ஏற்க மறுத்த அந்த குடும்பங்களையும் பள்ளிவாசலுக்கு வருமாறு முஅல்லிம் சாஹிப் அழைத்தார். மேலும், இது நம்முடைய முஸ்லிம் சேனலாகும். இதனைப் பாருங்கள். அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சித்திரத்தையும், காலத்தின் கலீஃபாவின் சித்திரத்தையும் நீங்கள் பார்க்கலாம் என்று கூறினார். எவ்வாறு இருப்பினும்,அவர் கூறுகின்றார்:

இன்ஸ்டலேஷன் முழுமையடைந்து தொழுகையை நிறைவேற்றிவிட்டு மீண்டும் டிவியை ஆன் செய்தபோது, அந்த நேரத்தில் எனது குத்பா MTAவில் வந்துகொண்டிருந்தது. ஜமாஅத் அல்லாத நபர்கள் மிக உன்னிப்பாக குத்பா கேட்டனர். மேலும் என்னை பாரத்துக் கொண்டிருந்தனர். ஆங்கில மொழியில் நிகழ்ச்சி வந்து கொண்டு இருந்தது. எனவே நான் உங்களுக்கு மொழியாக்கம் செய்கிறேன் என்று முஅல்லிம் சாஹிப் கூறினார்.

அதற்கு அவர், எனக்கு புரியவில்லை. ஆனால் நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். இந்த நபர் கூறுபவையெல்லாம் உண்மையாகும். இவர் பொய் பேச மாட்டார். இவர் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபா என்றால் ஜமாஅத் ஒருபோதும் பொய்யான ஜமாஅத்தாக இருக்க முடியாது என்று கூறினார். பின்னர் அப்போதே அஹ்மதிய்யத்தை ஒப்புக்கொள்வதாக அறிவித்துவிட்டனர்.

மாலி நாட்டிலிருந்து அங்குள்ள முஅல்லிம் சாஹிப் எழுதுகின்றார்:

ஒரு நபர் நமது மிஷன்ஹவுஸிற்கு வந்தார்.நான் தொடர்ந்து உங்கள் ரேடியோ நிகழ்ச்சிகளை கேட்டுவருகிறேன். மேலும் நான் பைஅத் செய்ய விரும்புகிறேன் என்று கூறினார். அவர் பைஅத் படிவத்தை பூர்த்தி செய்து கொடுத்தார். அவர் படித்த நபராக இருந்தார். எனவே எனக்கு ஃபிரன்ச் மொழியில் புத்தகங்கள் இருந்தால் கொடுங்கள். நானும் அதிலிருந்து பயனடைவேன். எனது தோழர்களுக்கும் நான் கொடுப்பேன் என்று அவர் கூறினார்.

முஅல்லிம் சாஹிப் அமைதி தொடர்பான எனது பல்வேறு சொற்பொழிவுகளின் தொகுப்புகளைக் கொண்ட புத்தகத்தை கொடுத்தார்

World Crisis and the Path way to Peace

என்ற நூலை வழங்கினார். அதன் ஃபிரன்ச் மொழியாக்கத்தைக் கொடுத்தார். அவர் அங்கேயே புத்தகத்தை திறந்தார். அவர் புகைப்படத்தை பார்த்தபோது அழுதுவிட்டார். பின்னர் அவர் கூறினார்:

நான் காபூன் என்ற ஊரில் இருந்தேன். இறைவனிடம் எப்போதும் நேர்வழிக்கானப் பாதையை வேண்டி வந்தேன். அப்போது நான் எண்ணற்ற முறை கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை கனவில் பார்த்தேன். இவர் யார்? என்று என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், எனது துஆ ஒப்புக் கொள்ளப்பட்டுவிட்டது. மேலும் அல்லாஹ் எனக்கு வழிகாட்டியுள்ளான் என்பது இன்று எனக்கு புரிந்து விட்டது.

நஸ்மா சாஹிபா என்பவர் அரபு பெண்மணி ஆவார். கூறுகின்றார்: நான் பைஅத் செய்வதற்கு இரண்டு ஆண்டுகள் முன்பு முதன் முறையாக ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புகைப்படத்தை பார்த்தேன் என்று கூறியவாறு ஒரு விஷயத்தை அவர் கூறுகின்றார். அதாவது தாங்கள் ஒரு பிள்ளையைப் பற்றி குறிப்பிட்டிருந்தீர்கள். அந்தப் பிள்ளை கோணல்மானலாக கோடுகளை கிழித்திருந்தான். மேலும் ஹுஸூர் நான் உங்களை நேசிக்கிறேன் என்று எழுதியிருந்தான் என்றும் தாங்கள் கூறியிருந்தீர்கள்.

எவ்வாறு இருப்பினும், அவர் கூறுகின்றார்: சிறுபிள்ளைகள் பொய்பேசுவதில்லை. எனது உள்ளத்தில் அது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர் பைஅத் செய்துவிட்டார்.

அவர் கூறுகின்றார்: ஆனால் சில காலம் கழித்து நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புகைப்படத்தைப் பார்த்து இவ்வாறு கூறினேன்: அதாவது, உங்களது முகத்திலிருந்து நீங்கள் நல்ல மனிதராவீர்கள். நீங்கள் பொய் பேசமாட்டீர்கள் என்பது தெரிய வருகிறது. ஆயினும் இதற்குப் பிறகும் கூட தாங்கள் விண்ணிலிருந்து அனுப்பப்பட்டுள்ளீர்கள் என்பதை என்னால் உண்மைபடுத்த முடியாது.

அவர் கூறுகின்றார்: நான் நூல்களை வாசித்தேன். அதிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 2016ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பைஅத் செய்துவிட்டேன். ஆனால் அதன்பின்னரும் உள்ளத்தில் கிலாஃபத் தொடர்பாக சந்தேகம் இருந்தது. கிலாஃபத்திற்கு வாதம் செய்யக் கூடிய ஒருவரிடம் நான் எப்படி எனது வாழ்க்கையின் கன்ட்ரோலை கொடுக்க முடியும்? நான் அப்படிபட்ட நபருக்கு கடிதம் எழுதி எனது நிலைமைகளை நான் ஏன் கூறவேண்டும்? கிலாஃபத்தால் என்ன நன்மை? என்று எனது மனதிலிருந்த ஷய்த்தான் கூறிவந்தது.

அவர் கூறுகின்றார்: ஆனால் கிலாஃபத்தே ராஷிதா, கிலாஃபத் அமைப்பு மற்றும் கட்டுப்படுதல் போன்ற ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் நூல்களைப் படித்ததால் அந்த சந்தேகங்கள் அகன்றுவிட்டன. எனக்கு அனைத்து

விஷயங்களுக்கும் விளக்கம் கிடைத்துவிட்டது. பின்னர் நான் கடிதம் எழுதினேன். தங்களிடமிருந்து எனக்கு கிடைத்த பதிலிருந்து எனது சந்தேகங்கள் அனைத்தும் முற்றிலும் நீங்கிவிட்டன. மேலும் கிலாஃபத்தும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அடிச்சுவட்டில் வழிநடக்கக் கூடியதாகும் என்பதில் எனக்கு உறுதி ஏற்பட்டுவிட்டது.

அவர் தொடர்ந்து எழுதுகின்றார்; இறைவன் உள்ளங்களில் அன்பை ஏற்படுத்தும்போது மிக வலிமையுடன் ஏற்படுத்துகிறான். நமக்கு அதற்கான காரணிகள் புரிவதில்லை.

மேலும் அவர் கூறுகின்றார். எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீதும், பொதுவாக அனைத்து கலீஃபாக்கள் மீதும், குறிப்பாக தங்கள் மீது வைத்துள்ள அன்பு குழந்தைகளின் அன்பை போன்றதாகும். பைஅத்திற்கு முன்னர் நாங்கள் இதுபோன்ற எந்த அன்பைப் பற்றியும் அறிந்திருக்கவில்லை.

நைஜீரியாவிலிருந்து ஸர்கட் மிஷனரி சாஹிப் எழுதுகின்றார்கள்:

பிள்ளைகளை அவர்களது தந்தையின் பெயருடன் சேர்த்து அழைப்பதற்குப் பகரமாக அவர்களது குடும்ப பரம்பரையின் பெயரால் அழைக்கப்பட வேண்டும் என்று ஒரு கேள்வி பதில் நிகழ்ச்சியில் மக்கள் விவாதித்துக் கொண்டிருந்தனர். அப்போது, பிள்ளைகளை அவர்களது சொந்த தந்தையின் பெயரால் அழைக்க வேண்டும் என்பதே திருக்குர்ஆன் போதனையாகும் என்று அன்னார் கூறினார்கள். குறிப்பாக சில அஹ்மதி அல்லாதவர்கள் மற்றும் புதிய அஹ்மதிகளுக்கு அது திருப்தி அளிக்கவில்லை.

அன்னார் கூறுகின்றார்கள். இரண்டு நாட்களுக்குப் பிறகு தாங்கள் சஹாபிகளைப் பற்றி குத்பா வழங்கிக் கொண்டிருந்தீர்கள். அப்போது ஸைது பின் ஸாபித் (ரலி) அவர்களின் சம்பவங்களை எடுத்துரைத்தீர்கள். அதில், ஸைது அவர்களை அரேபியர்கள் ஸைது பின் முஹம்மது என்று கூறத் தொடங்கியதாகவும் அப்போது அவரை அவரது தந்தையின் பெயரால் அழைக்க வேண்டும் என்று அல்லாஹ்விடமிருந்து கட்டளை வந்ததாகவும் தாங்கள் கூறினீர்கள். இந்த குத்பாவை கேட்ட பிறகு முழு ஜமாஅத்தும் குறிப்பாக இரண்டு நாட்கள் முன்பு வரை தர்க்கம் செய்து வந்த மக்களும் காலத்தின் கலீஃபா வழிகாட்டி விட்டார்கள் என்று மகிழ்ச்சியடைந்தார்கள்.

இந்த இரண்டு நாட்களில் அநேகமாக முபெல்லிக் சாஹிப் காலத்தின் கலீஃபாவிற்கு அங்கு செய்தியை எட்ட வைத்துவிட்டார். எனவே தான் அதனை அன்னார் குத்பாவில் குறிப்பிட்டார்கள் என்பது சிலரின் எண்ணமாக இருந்தது. ஆனால் நான் எதனையும் கூறவில்லை என்று முபெல்லிக் சாஹிப் கூறிவிட்டார். எனவே தொடர்ந்து அவர்கள் கூறுகின்றனர்:

எங்களது அல்லாஹ் சுயமே பதிலளிக்கச் வைத்துவிட்டான் என்று எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அந்த மகிழ்ச்சியில் ஜமாஅத்தின் ஓர் உறுப்பினர் அவர் செல்வந்தவர் ஆவார். லஜ்னா சகோதரிகள் அமரும் இடத்தில் மஸ்ஜிதின் ஒரு பகுதியில் வைப்பதற்காக மற்றொரு பெரிய டிவி ஒன்றை வாங்கினார். அவர்கள் கிலாஃபத்தின் பரக்கத்துகளிலிருந்து இழப்பிற்குரியவர்களாக இருக்கக் கூடாது என்பதற்காக அவர் அவ்வாறு செய்தார். கிலாஃபத் உள்ளத்தின் விஷயங்களை பேசுகின்றது என்று கூறினர்.

தற்போது, தொலைதூர பகுதிகளான பல்வேறு நாடுகளில் வசிக்கும் இந்த அஹ்மதிகள் பல்வேறு சமுதாயம் மற்றும் இனத்தைச் சார்ந்தவர்களாக உள்ளனர். அவர்களிடம் கிலாஃபத்துடன் இந்த தொடர்பை யார் உருவாக்குகின்றார்? நிச்சயமாக, அது அல்லாஹ்வின் உதவிகளும். ஆதரவுகளும் ஆகும். அவ்வாறில்லையென்றால் மனித எண்ணங்கள் அதனை அடைய முடியாது.

அடுத்து, நார்வே நாட்டிலிருந்து ஒரு பெண்மணி பரீஃபான் சாஹிபா எழுதுகின்றார்கள்.

எங்களது உள்ளங்களிலும், கண்களிலும் எங்களது அன்பிற்குரிய ஹுஸூர் அவர்கள் வசிக்கின்றார்கள். நாங்கள் அவர்களுக்காக துஆ செய்கின்றோம். அன்னாரை மகிழ்ச்சிபடுத்துவதற்கும் அன்னாரின் சுமையை சுமப்பதற்குமான வழிமுறைகளை சிந்திப்பதை தவிர்த்து எங்களுக்கு வேறு எந்த கவலையோ துன்பமோ கிடையாது என்று ஒவ்வொரு உண்மையான அஹ்மதியும் கூறுகின்றார்.

சஹாபிகள் தங்களது உடல்களில் அம்புகளை வாங்கிக் கொண்டு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை எவ்வாறு பாதுகாத்தார்கள் என்று தாங்கள் குத்பாக்களில் எடுத்துரைத்தீர்கள். அந்த காட்சிகளை எண்ணிப் பார்த்து எனது கண்களில் கண்ணீர் வந்துவிடுகிறது.

அதுபோன்ற சந்தர்ப்பம் எனக்கு வந்தால் நான் என்ன செய்திருப்பேன்? என்று நான் சிந்திக்கின்றேன்.

அவர் அரபு பெண்மணி ஆவார். நான் எதிர்கொண்டு உறுதியாக இருந்திருப்பேனா? என்று சிந்திக்கின்றேன். பின்னர் துஆ செய்கின்றேன். அதாவது அந்த சஹாபிகளைப் போன்று நாங்களும் எங்களது உள்ளத்தையும், உயிரையும், பிள்ளைகளையும் தியாகம் செய்து காலத்தின் கலீஃபா மற்றும் கிலாஃபத்தை பாதுகாப்பதற்கு அல்லாஹ் எங்களுக்கு நற்பேறு வழங்கவேண்டும் என்று நான் துஆ செய்கின்றேன். மேலும் தங்களுக்கு எத்தனை துன்பங்களும், கவலைகளும், பொறுப்புகளும் உள்ளனவோ அவை அனைத்திற்கும் சமமான எண்ணிக்கையில் அல்லாஹ் வானவர்களை இறக்குவானாக. அவர்கள் தங்களை சூழ்ந்து கொள்ளட்டுமாக என்று நான் பல வருடங்களாக தொழுகையில் துஆ செய்கின்றேன் என்று அவர் கூறுகின்றார்.

அல்லாஹ் மக்களின் உள்ளங்களில் ஏற்படுத்துகின்ற தூய்மை மற்றும் நன்றியுணர்வின் தொடர்புகள் இவை ஆகும். இன்ஷாஅல்லாஹ் கியாமத் வரை இந்த தூய்மை மற்றும் நன்றியுணர்விலும் முன்னேறக்கூடிய மக்களை அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கிக் கொண்டே இருப்பான். அஹ்மதிய்யா கிலாஃபத்திற்கும் வழங்கிக் கொண்டிருப்பான். உலகவாதிகளால் இதனை புரிந்து கொள்ள முடியாது.

ஜெர்மனியில் ஒரு அரேபியர் பைஅத் செய்தார். அவரை அறிந்த ஒருவர், நீங்கள் காதியானி ஆகிவிட்டீர்களா? எனக் கேட்டார். அதற்கு, அந்த புது அஹ்மதி இவ்வாறு பதில் அளித்தார். அவர் அரேபியராக இருந்தார்.

அரேபியர்களாகிய நீங்கள் இங்கு நூறு வகையான மக்களாக இருக்கின்றீர்கள். நீங்கள் எந்த ஒரு விஷயத்திலும் ஒன்றுபடுவதில்லை. அஹ்மதிய்யா ஜமாஅத்தில் ஒரு இமாம் இருக்கின்றார். அவரது கூற்றின்படி ஜமாஅத் எழுகின்றது. அமர்கின்றது. எனவே அதன் பணிகளில் பரக்கத் உள்ளது. நான் உங்களுடன் இணைந்து கொள்ளவதற்கும், அவர்களை விட்டுவிலகிவிடுவதற்கும் உங்களிடம் என்ன சிறப்பு உள்ளது? என்பதை தற்போது நீங்களே கூறுங்கள் என்று கேட்டார்.

எனவே ஒவ்வொரு அஹ்மதியும் கிலாஃபத்துடன் இணைந்து இருக்கும் வரை அல்லாஹ்வின் அருட்களுக்கு அவர் வாரிசாகிக் கொண்டே இருப்பார். அதற்காக நாம் நமது செயல்களை இறைவனின்

போதனைக்கேற்ப அமைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் இந்த அருட்கொடை நன்மை பயக்கும்.எவர்கள் ஈமான் கொண்டதுடன் அல்லாஹ் கூறிய வழிமுறைக்கேற்ப தமது செயல்களை ஆக்கிக் கொள்வார்களோ அவர்கள் கிலாஃபத்தின் அருட்கொடைகளிலிருந்து பயன்பெற்றுக் கொண்டிருப்பர் என்பதே அல்லாஹ்வின் வாக்குறுதியாகும்.

அதாவது, நாம் அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை கொண்டவாறு அவனது இறைவணக்கத்திற்குரிய உரிமைகளை நிறைவேற்றும்போதும், நமது ஒவ்வொரு செயலும் அல்லாஹ்வின் திருப்தியை தேடுவதாக அமையும்போதும் தான் நாம் அந்த அருட்களை பெறமுடியும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனில் அல்லாஹ் ஈமானுடன் நற்செயல்களையும் வைத்துள்ளான். எந்த செயலில் ஓர் அணு அளவு கூட குழப்பம் இருக்காதோ அதனையே நற்செயல் என்று கூறுவோம்.

அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

குடும்பத்தில் ஒரு நபர் நற்செயல் செய்பவராக இருந்தால் கூட முழுக் குடும்பமும் பாதுகாக்கப்பட்டு வரும். உங்களிடம் நற்செயல்கள் இல்லாதவரை ஏற்றுக்கொள்வது மட்டும் பயனளிக்காது என்பதை நினைவிற் கொள்ளுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம்-274,275)

எனவே எந்தநேரத்திலும் நம் மீது ஷய்த்தான் தாக்குதல் நடத்திவிடாமல் இருக்க நம்மை நாமே ஆய்வு செய்து கொண்டிருப்பது அவசியமாகும். அல்லாஹ் நமது முன்னோர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஒப்புக் கொள்வதற்கு நற்பேறு வழங்கினான் அல்லது நமக்கு அன்னாரை ஒப்புக் கொள்ள நற்பேறு வழங்கினான். இது அவனது கருணையாகும். மேலும் இந்த கருணையை தொடரச் செய்வதற்காக நாம் நிரந்தரமாக நமது ஈமானை அதிகரித்துக் கொள்வதும், ஈமானின் மீது பார்வையை வைத்திருப்பதும் அவசியமாகும். ஏனென்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன்னறிவித்திருந்த அந்த அருட்கொடையிலிருந்து நம்மில் ஒவ்வொரும் அப்போதுதான் பங்கு பெற்று வர முடியும். அதற்குரிய வாக்குறுதியை அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்திருந்தான். அதாவது கிலாஃபத் அமைப்பிற்கான வாக்குறுதியை வழங்கியுள்ளான்.

எனவே கிலாஃபத்துடன் எந்த அளவிற்கு நாம் நம்மை இணைத்து வைத்துள்ளோம் என்று நம்மை நாமே ஆய்வு செய்து கொண்டிருக்க வேண்டும். அப்போது தான் நாம் இறைவனின் ஏகத்துவத்தை ஒன்றுபட்டு நிலைநாட்டக் கூடியவர்களாக இருக்க முடியும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறை நெருக்கத்தைப் பெறுவதற்கான களம் காலியாகவே உள்ளது என்ற நற்செய்தியை உங்களுக்கு நான் தெரிவிக்கிறேன். ஒவ்வொரு சமுதாயமும் உலகத்தை நேசித்துக் கொண்டிருக்கின்றது. இறைவன் திருப்தியடையும் விஷயங்களின் பக்கம் உலகிலுள்ளவர்களுக்கு கவனமில்லை. எந்த மக்கள் முழுமையான வேகத்துடன் இந்த வாசலில் நுழைய விரும்புகின்றார்களோ அவர்கள் தங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்தி இறைவனிடமிருந்து சிறப்பான அருட்கொடையை பெற்றுக் கொள்வதற்குமுரிய சந்தர்ப்பம் இதுதான்.

இறைவன் உங்களை வீணாக்கி விடுவான் என நீங்கள் ஒருபோதும் கருதவேண்டாம். நீங்கள் உண்மையில் இறைவனின் கரத்தினால் மண்ணில் விதைக்கப்பட்ட விதையாவீர்கள். இந்த விதை முளைக்கும். பூக்கும். எல்லா திசையிலும் இதன் கிளைகள் படரும். பின்னர் வலுவானதொரு மரமாகிவிடும் என்று இறைவன் கூறியுள்ளான்.

(அல்வஸிய்யத்-ரூஹானி ஹஸாயின் தொகுதி 20,பக்கம் 308-309)

என் ஜமாஅத்திற்கு அறிவிக்கும்படி இறைவன் எனக்கு கூறியுள்ளதாவது:

உலகப்பற்று கலவாத,வஞ்சகமோ கோழைத்தனமோ கலவாத, கட்டுப்பாட்டின் எந்த தகுதியினையும் இழக்காத நம்பிக்கையை கொண்டவர்கள் இறைவனின் விருப்பத்திற்குரியோர் ஆவர். மேலும் அவர்களே உண்மையான பாதையில் செல்பவராவார்கள்.

(அல்வஸிய்யத்-ரூஹானி ஹஸாயின் தொகுதி 20, பக்கம்-309)

இந்த அனைத்து விஷயங்களையும் அன்னார் (அலை) அவர்கள் அல்வஸிய்யத் நூலில் கூறியுள்ளார்கள். அதில் கிலாஃபத் நிலைபெறுவது தொடர்பான நற்செய்தியையும் அன்னார் (அலை) அவர்கள் வழங்கியிருந்தார்கள். எனவே அன்னார் (அலை) அவர்களின் இந்த கூற்று, ஒவ்வொரு அஹ்மதியும் கிலாஃபத்துடனும் தூய்மை மற்றும் நன்றியுணர்வுடன் தொடர்பு வைக்க வேண்டும் என்பதன் பக்கம் கவனமூட்டுகிறது. மேலும் எவர்கள் இந்த தரத்தைப் பெறுபவர்களாக இருப்பார்களோ அவர்களே பைஅத்தின் உரிமைகளை செலுத்துபவர்களாக இருப்பர். மேலும் இது நிகழும்போதுதான் இன்று நாம் கிலாஃபத் தினத்தை கொண்டாடுவதற்குரிய உரிமையை செலுத்துபவர்களாகவும் திகழ்வோம்.

அனைவரும் கிலாஃபத்துடன் பைஅத்திற்குரிய உரிமைகளையும் செலுத்துபவர்களாக திகழவும், அல்லாஹ்வின் அருட்களை பெறுபவர்களாகவும் ஆகுவதற்குரிய நற்பேறை அல்லாஹ் அனைவருக்கும் வழங்குவானாக.

இன்று சிறியஅளவிலான பல்வேறு அறிவிப்புகளும் உள்ளன. அதாவது இன்று கானா ஜமாஅத் தனது ஜல்சாவை நடத்திக் கொண்டிருக்கிறது. இரண்டு நாள் ஜல்சா ஆகும். 27,28 தேதிகளில் புஸ்தானே அஹ்மதில் ஜல்ஸா நடைபெறுகிறது.

அதுமட்டுமின்றி நாடு முழுவதும் 119 சென்டர்களை அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். அவற்றிலும் 5 பெரிய இஜ்திமா சென்டர்கள் உள்ளன. மேலும் அவற்றிற்கிடையில் ஆடியோ மற்றும் வீடியோ மூலமாக தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1921-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் கானாவில் ஜமாஅத் ஆரம்பமானது. மவ்லானா அப்துர் ரஹீம் நய்யர் சாஹிப் அவர்கள் இங்கு லண்டனிலிருந்து கானாவை சென்றடைந்தார்கள். கடந்த ஆண்டு கானா ஜமாஅத் தனது நூற்றாண்டு விழாவை நடத்த விரும்பியது. ஆனால் கோவிட் காரணமாக எந்த நிகழ்ச்சியையும் நடத்த முடியவில்லை. எனவே 2022 மற்றும் 2023 இரண்டு ஆண்டுகளில் அந்த நிகழ்ச்சியை நடத்தவேண்டும் என்று தற்போது அவர்கள் முடிவு எடுத்துள்ளார்கள். அல்லாஹ் அவர்களின் ஜல்ஸாவை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக. அவர்களையும் அனைத்து அஹ்மதிகளையும் தூய்மையிலும், நன்றியுணர்விலும் முன்னேறச் செய்துகொண்டே செல்வானாக.

அதேபோன்று கேம்பியாவிலும் இன்று ஜல்ஸா நடைபெறுகிறது. இதுவும் மூன்று நாள் ஜல்ஸாவாகும். அல்லாஹ் இதனையும் எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக.

தமிழாக்கம் :

மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்

∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

(மல்ஃபூஸாத்... முதல் பக்கத் தொடர்ச்சி)

நிலக்கரியை அந்தப் பிள்ளையின் கைகளில் வைத்துவிடுவதையோ எப்போதாவது விரும்புவது சாத்தியமா? ஒருபோதும் இல்லை. ஏனென்றால் அது அக்குழந்தையின் உயிருக்கு ஊறு விளைவிக்கும் என்பதை அந்த தாய் அறிவார். எனவே மறைவானவற்றை அறிந்தவனாகவும், எல்லாவற்றையும் நன்கு அறிந்தவனாகவும் அல்லாஹ் இருக்கின்றான். மேலும் அவன் கருணை கொண்ட தாயைவிடவும் அதிகமாக மீண்டும், மீண்டும் கருணைகாட்டுபவன் ஆவான். தாயின் உள்ளத்திலும் அந்த பாசத்தையும் நேசத்தையும் அவனே ஏற்படுத்தியுள்ளான். அப்படிபட்ட அந்த இறைவன், தனது அன்பிற்குரிய ஓர் அடியார் தனது பலவீனம், தவறு மற்றும் அறிவீனம் ஆகியவற்றின் காரணமாக தனக்கு தீங்கு பயக்கும் விஷயத்திற்காக துஆ செய்துவிட்டால் அதனை உடனடியாக ஒப்புக் கொள்வதை எவ்வாறு ஏற்றுக் கொள்வான்? இல்லை. (அவன் அவ்வாறு செய்ய மாட்டான்) மாறாக அவன் அதனை மறுத்துவிடுவான். மேலும் அதற்குப் பகரமாக அதை விட சிறந்த விஷயத்தை வழங்கிவிடுகிறான். மேலும் (அந்த அடியார்) இது எனது இந்த துஆவின் தாக்கம் மற்றும் விளைவாகும் என்பதை நிச்சயமாக புரிந்து கொள்கிறார். மேலும் அவரது தவறைக் குறித்தும் அவருக்கு தெரிவிக்கப்படுகிறது. சுருக்கமாக, இறையச்சமுடையவர்களின் சில துஆக்களும் ஒப்புக் கொள்ளப்படுவதில்லை என்று கூறுவது முற்றிலும் தவறாகும். அவர்களின் எல்லா துஆக்களும் ஒப்புக் கொள்ளப்படுகின்றன. ஆயினும் அவர் தனது பலவீனம் மற்றும் அறியாமை ஆகியவற்றின் காரணமாக அவருக்கு நல்ல விளைவைத் தராத துஆவை செய்துவிட்டால் அப்போது அல்லாஹ் அந்த துஆவிற்கு பகரமாக அவரால் வேண்டப்பட்ட விஷயத்தை விட சிறந்த ஒன்றை அவருக்கு வழங்கிவிடுவான்.

(மல்பூஸாத் தொகுதி 1 பக்கம் 376 காதியான் பதிப்பு 2018)

* * * * *

## வருடாந்திர இஜ்திமாக்கள் 2022

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் இந்தாவது கலீஃபதுல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதியா, மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், மஜ்லிஸ் லஜ்னா இமாயில்லாஹ் ஆகிய கிளை அமைப்புகளுக்கான இஜ்திமாக்களை 21, 22, 23 அக்டோபர் 2022 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு பரிவுகூர்ந்து ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இதற்கேற்ப துஆக்கள் செய்தவாறு இந்த இஜ்திமாக்களில் பங்கு பெறுவதற்கு எல்லா முயற்சிகளையும் செய்யுங்கள்.

(சதர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, பாரத்)

(தஃப்ஸீரே கபீர்... முதல் பக்கத் தொடர்ச்சி)

வஹீயைப் பெற்றவராக இருக்கமுடியும். ஆனால் அதற்கான நிபந்தனை என்னவென்றால், அவர் அல்லாஹ் கூறிய வழிமுறைகளில் கட்டுப்படுதலுடன் நடக்க வேண்டும். மேலும் இயல்பை பொறுத்தவரை அதனை சீர்கெட்டுவிட அனுமதிக்கக் கூடாது. அவர் தமது இயல்பை தூய்மையாக வைக்கும்போதும் மேலும் ஒவ்வொரு மனிதனுக்கும் இன்னும் கூறப்போனால் எல்லா படைப்பினத்திற்கும் இறங்கக் கூடிய தேனைப் போன்று இருக்கக் கூடிய மென்மையான வஹீ என்ற வஹீயின் படி அமல் செய்ய வேண்டும். அதாவது தேனைப் போன்று அந்த வஹீ தூய்மையானதாக இருக்கின்றது. மேலும் அதில் மனித இனத்திற்கு குணமளிக்கும் தன்மை இருக்கின்றது. அதாவது அந்த வஹீ மனித பலவீனங்களை நீக்கி மனிதனை முழுமையான மனிதனாக ஆக்கிவிடுகின்றது.

إِنَّ فِي ذَٰلِكَ لَآيَةً لِّقَوْمٍ يَتَفَكَّرُونَ

இதில் இந்த கருத்தின் பக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது வஹீயின்றி உலகில் எந்தப் பணியும் நடப்பதில்லை. நேர்வழிக்கான பணியை நானே செய்து கொள்வேன் என்று எந்த நபர் கூறுவாரோ அவர் தவறிழைக்கின்றார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்தக் கருத்தில் அதிக அழுத்தம் தந்துள்ளார்கள். அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

மனித முயற்சி என்பது உலக விவகாரங்களில் துஆவின் அங்கமாக இருக்கின்றது. அதன் விளைவாக மனித எண்ணத்தில் தோன்றுகின்ற திட்டம் கூட வஹீயாகும். சுருக்கமாக, தேனீக்களின் உதாரணத்தின் மூலம் இந்த கருத்து கூறப்பட்டுள்ளது. அதாவது, இறை கூற்றுகளின்றி வெற்றிகரமான வாழ்க்கை சாத்தியமில்லை. எந்த அளவுக்கென்றால் விலங்குகளும் கூட வஹீயின் தேவையுடையவையாக உள்ளன. அவற்றின் மீதும் ஒரு வகையான வஹீ இறங்குகின்றது. அதற்கான தெளிவான உதாரணம் தேனீக்களிடம் காணப்படுகிறது.

எனவே உயிரினங்களின் வாழ்க்கை எல்லைக்குட்பட்டதாகவும், அவற்றின் அறிவு குறுகியதாகவும் இருக்கும் போதிலும் இறைவன் உயிரினங்களின் எல்லா பிரிவினருக்கும் வஹீயை இறக்கியுள்ளான். அவ்வாறிருக்க மறுஉலக வாழ்க்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வாழ்க்கையை கொண்டுள்ள மனிதன் மற்றும் அவனது அமைப்பு வஹீயின்றி எவ்வாறு செயல்பட முடியும்?

தேனைக் குறித்து இந்த வசனத்தில் வந்துள்ள இதே சொற்கள் திருக்குர்ஆனைக் குறித்தும் பல்வேறு இடங்கிலல் வந்துள்ளன. அதன் மூலம் இந்த விஷயம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது, வஹீயின் விளைவாக உருவாகும் அதே தனித்தன்மையை வேதம் தன்னுள் கொண்டுள்ளது. அதாவது குணமளிக்கும் தாக்கத்தை கொண்டுள்ளது.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 195, காதியான் வெளியீடு)

* * * * *

ஈதுல் அழ்ஹா குத்பா-2021 : 12ஆம் பக்கத் தொடர்ச்சி...

குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

எனவே இன்று நம்மில் ஒவ்வொருவரும் இந்தப் பெருநாளில் இந்த உறுதிமொழியை எடுக்க வேண்டும். அதாவது நாம் அந்த தரத்திற்கு ஏற்ப நம்மை நாம் ஆக்கிக் கொள்வோம் என்றும், அதற்கேற்ப வாழ்க்கையை கழிப்பதற்கு முயற்சி செய்வோம் என்றும், நமது சொல்லும், செயலும் அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப இருக்க வேண்டும் என்றும் உறுதிமொழி எடுக்கவேண்டும்.

நாம் இதன்படி அமல் செய்வதற்கு உறுதி மொழி எடுத்து மேலும் அதற்காக முயற்சி செய்கிறோம் என்றால் பின்னர் தக்வாவின் வழி நடப்பவர்களுக்கு வழங்குவதாக அல்லாஹ் வாக்குறுதி அளித்த அனைத்தையும் நிச்சயம் அல்லாஹ் நமக்கு வழங்குவான். எதிர்ப்பவர்களின் எதிர்ப்புகள் ஒன்றும் செய்ய முடியாது. நாம் விலங்குகளை குர்பானி செய்வதிலிருந்து தடுக்கப்பட்டால் நமக்கு எந்த கவலையும் இல்லை. அல்லாஹ்வின் திருப்தி இல்லையென்றால் பின்னர் நாம் குர்பானி செய்தாலும் கூட அது நமக்கு உண்மையான மகிழ்ச்சிக்குரிய இடம் இல்லை. தக்வாவின் உண்மைத்துவத்தை புரிந்தவாறு அதற்கேற்ப நமது வாழ்க்கையை கழிப்பதற்கு அல்லாஹ் நமக்கு நற்பேறு வழங்குவானாக.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: தற்போது நாம் துஆவும் செய்வோம். துஆவில் சிறையின் கொடுமைகளை அனுபவித்து, தியாகங்களும் செய்து வரும் இறைவழி சிறைக் கைதிகளை குறிப்பாக நினைவிற் கொள்ளவும். அல்லாஹ் விரைவாக அவர்களின் விடுதலைக்கான ஏற்பாட்டினை செய்வானாக. பின்னர் தனது மார்க்கம் மற்றும் ஈமானின் காரணமாக பல்வேறு துன்பங்களை கடந்து வரும் மக்களையும் நினைவிற்கொள்ளுங்கள். அஹ்மதிகளாக இருப்பதன் காரணமாக அவர்களின் வியாபாரங்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யப்படுகின்றது. பாகிஸ்தானில் பொதுவாக ஜமாஅத் உறுப்பினர்களுக்கு தொல்லைகளையும், அநீதிகளையும் இழைப்பதற்கு முயற்சி செய்யப்படுகின்றது. அவர்கள் உண்மையில் இருக்கும் நிலையிலும் அவர்கள் வேலைகளிலிருந்து வெளியேற்றப்படுகின்றார்கள். அதேபோன்று, அனைத்து அநீதியிழைக்கப்-பட்டவர்களுக்காகவும், இழப்பிற்குரியவர்களாக இருப்பவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். மனித இனத்திற்காகவும் துஆ செய்யுங்கள். அவர்கள் அல்லாஹ்வை அடையாளம் காண்பவர்களாக ஆகட்டுமாக. மேலும் அல்லாஹ்வின் கோபத்திலிருந்து தப்பிக்கட்டுமாக. உலகம் எந்த அழிவின் பக்கம் சென்று கொண்டு இருக்கின்றதோ அந்த அழிவின் கிடங்கில் விழுவதிலிருந்து தப்பிப்பதற்கு அல்லாஹ் அவர்களுக்கு அறிவை வழங்குவானாக. அவர்கள் அல்லாஹ்வை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். மேலும் தனது நிலைமைகளை மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் ஒரு பெரும் அழிவு வாயை பிளந்து கொண்டு நிற்கிறது. அல்லாஹ் கருணை செய்வானாக. அல்லாஹ் எல்லா அஹ்மதிகளுக்கும் இந்த பெருநாளை எல்லாவகையிலும் மிகவும் அருளுக்குரியதாகவும் வாழ்த்துக்குரியதாகவும் ஆக்குவானாக.

* * * * *

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 30 June 2022 Issue No. 26

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

**அனைவரும் தக்வாவின் வழிகளில் வழிநடப்பது நமது ஜமாஅத்திற்கு அவசியமாகும்.**

## ஹஸ்ரத் அமீருல் முஃமீனீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஜுலை 21,2021 அன்று மஸ்ஜித் முபாரக், இஸ்லாமாபாத்தில் வழங்கிய ஈதுல் அழ்ஹா குத்பா பேருரையின் சுருக்கம்

தஷஹ்ஹுது, தவூது மற்றும் சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சூரா அல்ஹஜ்ஜின் 38 வது வசனத்தை ஓதினார்கள்.

لَنْ يَّنَالَ اللّٰهَ لُحُوْمُهَا وَلَا دِمَآؤُهَا وَلٰكِنْ يَّنَالُهُ التَّقْوٰى مِنْكُمْ ؕ كَذٰلِكَ سَخَّرَهَا لَكُمْ لِتُكَبِّرُوا اللّٰهَ عَلٰى مَا هَدٰىكُمْ ؕ وَبَشِّرِ الْمُحْسِنِيْنَ

பொருள் : அவற்றின் இறைச்சியும், அவற்றின் இரத்தமும் ஒருபோதும் அல்லாஹ்வைச் சென்றடைவதில்லை. மாறாக உங்கள் உள்ளங்களிலுள்ள இறையச்சம் தான் அவனைச் சென்றடைகின்றது. அல்லாஹ் உங்களுக்கு நேர்வழியினைக் காட்டியதற்காக, நீங்கள் அவனது பெருமையினை எடுத்துரைக்க இவ்வாறு அவன் அவற்றை உங்களுக்குத் தொண்டு செய்ய வைத்தான். நற்செயல் செய்பவர்களுக்கு நீர் நற்செய்தியினை வழங்குவீராக. (22:38)

ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள் : இன்று தியாகப் பெருநாள் ஆகும். அதனை நாம் ஈதுல் அழ்ஹா என்றும் கூறுகின்றோம். இந்தப் பெருநாளன்று முஸ்லிம்கள் மிகவும் ஆர்வத்துடன் குர்பானிகள் கொடுக்கின்றனர். ஆடுகள், மாடுகள், ஒட்டகங்கள் குர்பானி கொடுக்கப்படுகின்றன. முஸ்லிம் உலகில் இந்தப் பெருநாள் சந்தர்ப்பத்தின் போது ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான விலங்குகள் பலியிடப்படுகின்றன.

கூறினார்கள் : இறையச்சம் இல்லையென்றால், உங்களின் பெரிய, விலை உயர்ந்த விலங்குகளின் குர்பானிகளை மட்டும் இறைவன் ஒப்புக் கொள்வதில்லை என்ற விஷயத்தை நான் ஓதிய வசனத்தில் அல்லாஹ் கூறிவிட்டான். அல்லாஹ்விற்கு உங்களின் இறைச்சி மற்றும் இரத்திற்கு எந்த தேவையும் இல்லை. அவன் இந்த தேவைகளிலிருந்து தூயவன் ஆவான்.

எனவே குர்பானி கொடுப்பதிலிருந்து நாம் தடுக்கப்பட்டுவிட்டோம் என்றோ அல்லது மவ்லவிகள் அல்லது அரசாங்க ஊழியர்கள் எங்களுடைய குர்பானி விலங்குகளை எடுத்து சென்றுவிட்டார்கள் என்றோ கவலையடைய அவசியமில்லை. சில இடங்களில் பலியிடப்பட்ட விலங்குகளின் இறைச்சியை எடுத்து சென்றுவிட்டனர். மேலும் இது உங்களுக்கு ஹராம் ஆகும் என்று கூறுகின்றனர். அவர்களிடம் சென்ற பிறகு அவை ஹலாலாகி விடுகிறது. எவ்வாறிருப்பினும், நாம் தக்வாவின் வழிநடந்தவாறு அந்த குர்பானிக்கான எண்ணம் கொண்டு குர்பானி கொடுத்தால் பின்னர் அல்லாஹ் கூறுகின்றான். அதாவது, அவை என்னிடத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டுவிட்டன. ஒருவேளை தக்வாவிலிருந்து வெறுமையான குர்பானியாக அவை இருக்குமென்றால் பின்னர் அவை பயனற்ற ஒரு விலங்கின் குர்பானியாக இருக்கும்.

எனவே நமது பணி இதுவாகும். அதாவது நாம் நமது ஒவ்வொரு செயலிலும் இறையச்சத்தை கருத்தில் கொள்ளவேண்டும். அல்லாஹ் நமக்கு இந்த காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ். மற்றும் வாக்களிக்கப்பட்ட மஹ்தி (அலை) அவர்களை ஒப்புக் கொள்ளும் நற்பேறை வழங்கியுள்ளான். இது நமது நற்பேறாகும். அன்னார் (அலை) அவர்கள் நமக்கு திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்தின் ஒளியில் இறையச்சத்தின் உண்மைத்துவத்தை புரிய வைத்துவிட்டார்கள். நமக்கு குர்பானி கொடுப்பதற்கு சந்தர்ப்பம் அமையவில்லை என்ற விஷயத்தில் நாம் கவலையடையவோ அல்லது சோர்வடையவோ அவசியமில்லை. நாம் காலத்தின் இமாம் கூறிய வழிமுறைகளில் அமல் செய்து கொண்டிருந்தால் மேலும் தக்வாவில் நாம் நிலைநின்றால் பின்னர் நல்ல நிய்யத்துடன் செய்யப்பட்ட குர்பானிக்கான எண்ணங்கள் அல்லாஹ்விடத்தில் ஒப்புக்கொள்ளப்படும். இன்ஷாஅல்லாஹ்.

தக்வா இல்லாத வெளிப்படையான அமல்கள் பொருளற்றது ஆகும். ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம்மை ஏற்றுக் கொண்டவர்களிடம் எப்படிபட்ட தக்வாவை உருவாக்க விரும்புகிறார்கள் என்பதை நான் தற்போது எடுத்துரைக்க விரும்புகிறேன். நாம் நம்மிடத்தில் அதனை உருவாக்கிக் கொண்டால் பின்னர் நாம் நற்பேறுபெற்றவர்கள் ஆவோம். அவ்வாறில்லையென்றால் நாம் குர்பானி கொடுத்துவிட்டாலும் அது தக்வா இல்லாமல் இருக்குமென்றால் மேலும் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக மட்டுமே நாம் குர்பானி கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லையென்றால் பின்னர் அந்த குர்பானி பயனற்றதாகும்.

இறையச்சம் உடையவர் யார்? என்ற விஷயத்தை விவரித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: மென்மை மற்றும் எளிமையுடன் நடப்பவரும் ஆணவத்துடன் உரையாடாதவரும் இறையச்சமுடையவர் ஆவார் என்பது இறைவேதத்தில் காணப்படுகிறது. சிறியவர் பெரியவரிடம் உரையாடுவதைப் போன்று அவர்களது உரையாடல்கள் இருக்கும். அல்லாஹ் சிறப்பான தக்வாவை விரும்புகிறான். எவரிடம் தக்வா இருக்குமோ அல்லாஹ் அவருடையவனாகி விடுவான்.

அல்லாஹ்விற்கு உண்மையான நன்றி செலுத்துவதற்கு தக்வா நிபந்தனை ஆகும் என்ற விஷயத்தின் பக்கம் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

உங்களின் அசல் நன்றியுடைமை என்பது தக்வா மற்றும் தூய்மையே ஆகும். கேட்கும்போது அல்ஹம்துலில்லாஹ் என்று முஸ்லிம்கள் கூறிவிடுவது மட்டும் உண்மையான தூய்மையும், நன்றியும் ஆகிவிடாது. நீங்கள் உண்மையான தக்வா மற்றும் தூய்மையை மேற்கொண்டுவிட்டால் நான் உங்களுக்கு நற்செய்தி வழங்குகிறேன். நீங்கள் (அந்நிலையில்) எல்லையில் நிற்கின்றீர்கள். எவரும் உங்களை வெற்றிகொள்ள முடியாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் தக்வாவை மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால் தக்வா என்ற ஒரு விஷயத்தை மட்டுமே ஷரீஅத்தின் சாராம்சம் என்று கூறமுடியும். ஷரீஅத்தை சுருக்கமாக எடுத்துரைக்க வேண்டும் என்றால் பின்னர் ஷரீஅத்தின் சத்து தக்வாவாக மட்டுமே இருக்க முடியும். தக்வாவின் படித்தரங்கள் ஏராளமானதாக உள்ளன. ஆயினும் வேண்டுபவர் உண்மையாளராக திகழ்ந்து ஆரம்ப படித்தரங்களை உறுதிப்பாட்டுடனும், தூய்மையுடனும் கடந்து சென்றால் அவர் நேர்மை மற்றும் உண்மையான தேடுதலின் காரணமாக உயர் படித்தரங்களை அடைய முடியும். முடிந்த வரை ஒவ்வொரு நபரும் தக்வாவின் வழிகளில் வழிநடப்பது நமது ஜமாஅத்திற்கு அவசியமாகும். அப்போதுதான் துஆ ஒப்புக்கொள்ளப்படுதலின் இன்பத்தையும், மகிழ்ச்சியையும் பெற முடியும். மேலும் ஈமானின் முன்னேற்றத்தின் பங்கையும் பெற முடியும்.

இதன் தொடர்ச்சி 11-ஆம் பக்கம்...

### திருக்குர்ஆனிலிருந்து...


(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய்தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A. Basheer Ahmad (Sec. Waqf-e-Jadid, Melapalayam)

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230




All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad